
www.samarasam.net

# சமரசம்

மாதம் இருமுறை இதழ்

16-31 ஜுலை 2023 ₹25



இறை அழைப்பை ஏற்றார்
ஆன்மிக ஞானி
மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான்

அமெரிக்காவில் நரேந்திர மோடி:
கட்டமைக்கப்பட்ட பிம்பங்களும்
உண்மைகளும்



## பொது சிவில் சட்டம்
## ஏன் தேவையில்லை?

2024 நாடாளுமன்றத் தேர்தல்:
**எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை சாத்தியமா?**

# Islamic Foundation Trust (IFT)

## Books Available @

Our Mobile App @
Google Play
# IFT Chennai

Our Books Available @
amazon books
# Islamic Foundation Trust

E-Books Available @
Google Play
Books
# IFT Chennai









**FREE**
**AUDIO QUR'AN**
**AUDIO BOOKS**
**E-BOOKS**
**AND MORE**

@ our Official Website

YouTube

**www.iftchennai.in**

**86680 57596**

**also Available @**

**Connemara Public Library**
**Egmore, Chennai - 8**

**Quality Book Center**
**Triplicane, Chennai - 5**

**அதிக பக்கங்களுடன் அதிக தகவல்களுடன் விரைவில்...**






## உள்ளே...


6 எல்லாருக்கும் எதிரான பொது சிவில் சட்டம் - தலையங்கம்

8 பொது சிவில் சட்டம் ஏன் தேவையில்லை? - டாக்டர் ஜாவீத் ஜமீல்

14 மணிப்பூர் நெருப்பில் குளிர்காய்வது யார்? - சே.ஹபிபுர் ரஹ்மான்

18 2024 நாடாளுமன்றத் தேர்தல்: எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை சாத்தியமா? - சேயன் இப்ராகிம்

21 தூக்கம் எனும் அருட்கொடை - அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

23 திசை: இளைஞர் - மௌலானா மௌதூதி(ரஹ்)

24 இறை அழைப்பை ஏற்றார் மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான்

31 அமெரிக்காவில் மோடி: - அரவிந்தன் கண்ணையன்

37 ஆதிவாசிகள் அனுபவிக்கும் அநீதி - K.S. அப்துல் ரஹ்மான்

40 ஹிஜாபின் வரலாறு - மௌலவி முஹம்மது சித்தீக் மதனி

44 அர்த்தமுள்ள மரணம் - S.சாகுல் ஹமீது

47 கவிதை: என்ன செய்வதாய் உத்தேசம்? - அம்மு

48 சிறார் உலகம்: பூனைகளைப் பற்றிய தகவல்கள்

50 அசத்தும் ஆளுமை - குளச்சல் ஆசிம்

• கடிதங்கள் • குர்ஆன் • ஹதீஸ்



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

சந்தா - விநியோகப் பிரிவு :

**044 - 2662 0091**

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
• 044-2662 0091
• samarasam.article@gmail.com
• www.samarasam.net




## ஒரு பட்டிமன்றமே நடத்தலாம் போல..

ஹஜ் பயணம் பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. அதில் ஒழுக்கமுள்ள, நியாயமான மனிதர்கள் தான் ஹஜ்ஜிற்குச் செல்ல வேண்டும் என்பதைக் கறாராகப் பதிவு செய்திருந்தது மிக அருமை. புதிய நாடாளுமன்ற கட்டிடத் திறப்பு விழாவைப் பற்றி ஒரு பட்டிமன்றமே நடத்தலாம் போல! அவ்வளவு சர்ச்சைகள். ஊனம் ஒரு தடையல்ல என்பதை உணர்த்திக் காட்டிய சிறுவன் ஆஸிமை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆஸிமை சமரசம் குழு, ஜமாஅத்தே இஸ்லாமி, எஸ்ஐஓ-வினர் சந்தித்து தங்களின் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளது பாராட்டுக்குரிய விஷயம். 44 ஆம் ஆண்டில் சமரசம் காலடி எடுத்து வைத்துள்ளது மகிழ்விற்குரிய விஷயம்.

– இரா. சண்முகவேல்,
கீழக்கலங்கல்

## அருமையான சிறுகதை

பெருநாள் சட்டை சிறுகதை மிக அருமை. அண்டை வீட்டுக்காரர் பசித்திருக்கத் தான் வயிறு புடைக்க உண்ணக் கூடாது எனும் கருத்தை மிகவும் அழகாகவும் அழுத்தமாகவும் தன்னுடைய எழுத்துகளின் வாயிலாக உணர்த்திய பருத்தி இக்பால் அவர்களுக்கு நன்றி.

– எம். லைலாம்மா, தேனி

## பாஜக அரசின் செயல் கண்டனத்திற்குரியது

புதிய நாடாளுமன்றத்தை நாட்டின் முதல் குடிமகளான குடியரசுத் தலைவரை வைத்துத் திறப்பது தான் முறை. ஆனால் அவர் ஒரு பழங்குடியினப் பெண் என்பதாலேயே அவரை திறப்பு விழாவுக்குக் கூட அழைக்காமல் மோடியை வைத்து கட்டிடத்தைத் திறந்த பாஜக அரசின் செயல் கண்டனத்திற்குரியது. 44ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் சமரசத்தின் பயணம் தொடர வாழ்த்துகள்!

– எஸ்.மருதனன், எஸ். அஜித்தா, தேனி

## ஆஸிம் ஓர் அதிசயம்

சிறுவன் ஆஸிம் வெறும் இரண்டரை ஆண்டுகளில் திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்துள்ளார் என்பது அல்லாஹ்வின் அருட்கொடைகளில் ஒன்றே! தன்னுடைய குழந்தை கருவில் உள்ள போதே குறையுடன் இருப்பதை அறிந்தும் குழந்தையைப் பெற்று சாதனையாளனாக மாற்றியுள்ள பெற்றோர்களை இறைவன் பொருந்திக்கொள்வானாக! ஆஸிமை இருந்த இடத்திலிருந்து கூட அசைய முடியாது என்று நினைத்தவர்கள் முன் ஆஸிமை அல்லாஹ் அதிசயமாக்கிவிட்டான். குறைகளை நிறைகளாக்கிய இறைவனுக்கே எல்லாப் புகழும்!

– எஸ். ஷம்ஷாத், திருச்சி

## பதைபதைக்கச் செய்த விபத்து

ஒடிசா ரயில் விபத்தைப் பற்றிய செய்திகளைப் படிக்கையில் மனம் பதை பதைக்கிறது. ரயில் விபத்தைப் பற்றி அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பிய சமரசத்தின் தலையங்கம் மிக அருமை. ஹஜ்ஜின் நோக்கத்தைப் பற்றிய மௌலவி இஸ்மாயீல் இம்தாதியின் கட்டுரை அறிவுக் கண்ணைத் திறப்பதாக அமைந்தது.

– எம்.ஷர்மிளா, திண்டுக்கல்

## புதிய மாற்றங்கள் நிகழட்டும்

பெருநாள் சட்டை கதையில் நபி(ஸல்) அவர்களின் அறிவுரைகளை நடப்பில் கொண்டு வந்த கான்சரவின் பேரன் கதாபாத்திரம் இந்த இதழில் மிளிர்கிறது. ஹஜ்ஜுப் பெருநாள் சந்திப்புகளும் அதிகரிக்க வேண்டும் என்கிற ஆதங்கம் புதிய மாற்றங்களைக் கொண்டு வரும் என்பதில் ஐயமில்லை.

– ப.பீர் இலாஹி, உத்தமபாளையம்

## மனதை நெகிழவைத்த செய்தி

இரு கைகளும் இல்லாத நிலையிலும் இறைவன் தனக்கு வழங்கிய நம்பிக்கையின் மூலமாகப் பல சாதனைகளைப் புரிந்து வரும் சிறுவன் ஆஸிமைப் பற்றிய செய்தியை வாசிக்கையில் என் மனம் நெகிழ்ந்து விட்டது. இச்சிறுவன் இன்னும் பல சாதனைகளைப் படைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

**- சையது காஜா மைதீன், தேனி**

## அரசு கண்டிப்பாகப் பதிலளிக்க வேண்டும்

இரயில் விபத்தைப் பற்றிய ஆசிரியரின் கேள்விகள் அதிர்ச்சி அளிக்கும் வகையிலிருந்தது. அரசு கண்டிப்பாக அந்த அத்தனை கேள்விகளுக்கும் பதிலளித்து குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும்.

**- ஜியாவுதீன், கலையம்புத்தூர்**

## ரயில்வே அமைச்சகமே பொறுப்பேற்க வேண்டும்

ஒடிசாவில் நடந்த கோரமண்டல் ரயில் விபத்து ஒன்றிய ரயில்வே அமைச்சகத்தின் பொறுப்பற்ற போக்கையே காட்டுகிறது. நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டு நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய இத்துயரச் சம்பவத்திற்கு ரயில்வே அமைச்சகமே பொறுப்பேற்க வேண்டும். மக்களின் உயிர்களைத் துச்சமாக எண்ணும் பாஜக அரசு வளர்ச்சி! வளர்ச்சி! என்று கூப்பாடு போடுவது வேடிக்கையாக உள்ளது.

**- எம்.முஹம்மது கடாஃபி, கொடிக்கால்பாளையம்**

## நீதமற்ற ஆட்சியாளர்களுக்கான அபாயச் சங்கு

அரசு ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்யவில்லை என்பதற்கான உதாரணமே பாலசோர் ரயில் விபத்து. தலையங்கத்தின் வினாக்களுக்கு ஆட்சி மாற்றமே விடையாகும். ஹஜ்ஜின் நோக்கமும் நிபந்தனைகளும் கட்டுரை பல தெளிவான விளக்கங்களுடன் ஹஜ் செய்பவர்களுக்கான அறிவுரைகளையும் மற்றவர்களுக்குப் புரிதலையும் வழங்கியுள்ளது. நாட்டுக்கான அரசுக் கட்டிடத் திறப்பை ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் புறக்கணித்திருப்பது தங்களுக்கான அபாய அறிவிப்பு என்பதைக்கூட ஆளும் அரசு உணராமலிருப்பது அவர்களின் முட்டாள்தனத்தையே காட்டுகிறது. பெருநாள் சட்டை வறுமையில் வாழும் மக்களின் உணர்வுப்பூர்வப் போராட்டத்தைப் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

**- சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்**

## ஹஜ் சிறப்புக் கட்டுரை அருமை!

ஹஜ்ஜின் நோக்கமும் நிபந்தனைகளும் கட்டுரை சிந்திக்கத் தூண்டும் வகையில் பல முக்கியச் செய்திகளை நேரடியாக உரக்கச் சொல்லி இருக்கிறது. ஐவேளைத் தொழாதவர்கள், ரமளான் மாதத்தை உதாசீனப்படுத்தியவர்கள், நீதமற்றவர்கள், ஹராமான பொருளாதாரத்தை வைத்திருப்பவர்கள், அமானிதத்தைப் பேணாதவர்கள் போன்றவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றிய பிறகும் பழையபடி வழிகேட்டில் தான் தொடர்வார்கள் எனும் செய்தி ஹஜ்ஜின் முக்கியத்துவத்தையும் அந்த இபாதத் மனித வாழ்வில் நிகழ்த்த விரும்பும் மாற்றங்களையும் விளக்குவதாக அமைந்தது.

**- ச. சையத் பஷீர் அஹமத், மதுரை**

## விசாரணை ஆணையத்தின் அறிக்கையைப் போல..

ஹஜ் சிறப்பிதழின் அனைத்தும் மிகச் சிறப்பு. தலையங்கம் விசாரணை ஆணையத்தின் அறிக்கையைப்போலத் தெளிவாக இருந்தது. சேயன் இப்ராஹிமின் கட்டுரை மிக அருமை. சிறுவன் ஆஸிமைப் பற்றிய பதிவு உத்வேகமளிப்பதாக இருந்தது. கடந்தாக வேண்டும் கவிதையில் தேனி ச.ஹமியின் சுவனம் பற்றிய வருணனை அருமை. கவிஞரின் பேனா ஓங்கட்டும்.

**- முகம்மத் காலித், வேலூர்**

சரம் : 44
மலர் : 03

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

1444 துல்ஹஜ் 27 - 1445 முஹர்ரம் 12 • 2023 ஜூலை 16 - 31

# எல்லாருக்கும் எதிரான பொது சிவில் சட்டம்

**2023** ஜூன் 27ஆம் தேதி மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பிரதமர் மோடி, ‘பொது சிவில் சட்ட விவகாரத்தில் சிலர் தவறான கருத்துகளைப் பரப்பி, குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினருக்கு ஒரு சட்டமும், மற்றோர் உறுப்பினருக்கு வேறொரு சட்டமும் இருந்தால் அந்தக் குடும்பத்தை நடத்த முடியுமா? இந்தக் கருத்தை நமது நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறேன். இரண்டுவிதமான சட்டங்களால் நாட்டின் நிர்வாகத்தை நடத்த முடியுமா? நாட்டின் குடிமக்கள் அனைவரும் சமம் என்று அரசமைப்பு சாசனம் கூறுகிறது. இதற்கேற்ப பொது சிவில் சட்டத்தை வரையறுக்குமாறு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது. இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவது அவசியம்’ என்று குறிப்பிட்டார்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இதில் நியாயம் இருப்பதுபோல் தோன்றலாம். ஆனால் சிந்தித்துப் பார்த்தால் இதனுடைய அபாயத்தை நாம் விளங்கிக் கொள்ள முடியும். இந்தியா போன்ற பன்மைச் சமூகத்தினர் வாழும் நாட்டில் பொது சிவில் சட்டம் சாத்தியமற்றது. நம் நாட்டில் 98 விழுக்காடு சட்டங்கள் அனைவருக்கும் பொதுவானவையாகத் தான் உள்ளன. கிரிமினல் சட்டங்கள் எல்லாருக்கும் பொதுவானதுதான். சிவில் சட்டத்திலும்கூட ஒப்பந்தம், சொத்துப் பரிமாற்றம், சாட்சியம் அளிக்கும் சட்டம் எல்லாருக்கும் பொதுவானவைதான். திருமணம், விவாகரத்து, ஜீவனாம்சம், பாகப்பிரிவினை, நன்கொடை அளித்தல், வக்ஃப் ஆகியன தான் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனியாக இருக்கின்றன.

தனியார் சட்டங்கள் முஸ்லிம்களுக்கு மட்டும் இருப்பதைப்போல் இங்கு கட்டமைக்கப்படுகிறது. உண்மையில் இந்து திருமணச் சட்டங்கள், கிறித்தவ தனியார் சட்டம், ஃபார்ஸி போன்று 300க்கும் மேற்பட்ட பிரிவினருக்குத் தனியார் சட்டங்கள் இருப்பதுபோல்தான் முஸ்லிம்களுக்குத் தனியார் சட்டம் இருக்கின்றது. பிரிவு 371A முதல் 371 I வரைக்கும் மராட்டி, குஜராத், நாகலாந்து, மிசோராம், சிக்கிம், கோவா போன்ற பல மாநிலங்களுக்குத் தனியாக சட்டங்கள் உள்ளன.

பழங்குடியினருக்கென்று தனியார் சட்டங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் பன்மைச் சமூக நாட்டின் பெருமைமிகு அடையாளங்கள். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனியார் சட்டங்கள் இருப்பதால் இந்த நாட்டில் இதுவரை எந்தக் குழப்பமும் இல்லை. பல நூற்றாண்டுகளாக இந்தியா

பொது சிவில் சட்டத்திற்கான தேவை இல்லாமல் தான் இருந்தது. இப்போதும் அதற்கான தேவை எதுவும் இல்லை.

2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டு பெரும் பான்மை இந்துக்களைக் கவர்ந்துவிடலாம் என்ற தீய எண்ணத்துடன் பாஜக பொது சிவில் சட்டப் பூச்சாண்டியைக் கையில் எடுத்திருக்கிறது. ஏற்கனவே 1970, 1985ஆம் ஆண்டுகளில் பொது சிவில் சட்டப் பிரச்னை எழுந்து அடங்கியது. 2016ஆம் ஆண்டு எழுந்த பொது சிவில் சட்டப் பிரச்னையின் போது 21ஆவது சட்ட ஆணையம் பொது மக்கள் கருத்துகளைக் கேட் டறிந்து ‘பன்முகத் தன்மை கொண்ட நம் இந்திய நாட்டுக்குப் பொது சிவில் சட்டம் தேவையில்லை’ என்று 2018ஆம் ஆண்டு அறிக்கை சமர்ப்பித்தது.

ஒவ்வொருவரும் அவரவர் விரும்பும் மதத்தைப் பின்பற்ற, வழிபட, பரப்புரை செய்ய இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 25 அடிப்படை உரிமையாக வழங்கியுள்ளபோதும், வழிகாட்டு நெறிமுறை 44ஐ நடைமுறைப்படுத்தத் துடிப்பது தேவையற்றது. பிரிவு 45 அனைவருக்கும் இலவசக் கல்வியையும், பிரிவு 47 மதுவை முற்றாகத் தடை செய்வதையும் பேசுகிறது. பிரிவு 44இல் காட்டும் அக்கறையை 45, 47இல் காட்டினால் அது நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும்.

‘பிரிவு 44ஐ நடைமுறைப்படுத்துவதற்காக எந்த அரசும் தன் அதிகாரத் தைப் பயன்படுத்தி முஸ்லிம்களை அச்சமடையச் செய்யும் வகையில் செய லாற்றக் கூடாது. அவ்வாறு செயலாற்ற முனைந்தால் அது புத்தி சுவாதீன மற்ற அரசாகத்தான் இருக்கும்’ என்று 1948 டிசம்பர் 2ஆம் நாள் பொது சிவில் சட்ட விவாதத்தை நிறைவு செய்யும் கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் கூறியதை பிரிவு 44ஐ நடைமுறைப்படுத்தக் கோருவோர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எல்லாருக்கும் பொதுவான சட்டம் என்றால் அது எதை அடிப்படையாகக் கொண்டிருக்கும்? பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களுக்கான சட்டமும் பொதுவாக் கப்படுமா? இல்லை அதை நீக்கத்தான் முடியுமா? ஒரு மத வழிபாட்டு முறையை அனைத்து மதத்தினரும் பின்பற்ற வேண்டும் என்பது எவ்வகைச் சாத்தியம்?

இஸ்லாம் என்பது வழிபாடுகளுடன், சடங்குகளுடன் முடிந்து விடுகின்ற மதம் அல்ல. வாழ்க்கை முழுமைக்குமான வழிகாட்டுதல்களை இறைவன் வழங்கி யுள்ளான். தொழுகைக்கு எப்படி வழிகாட்டப்பட்டுள்ளதோ அதுபோலவே திருமணம், விவாகரத்து, பாகப் பிரிவினை யாவும் மார்க்கத்தின் ஒரு பகுதியே! எனவே முஸ்லிம்கள் பொதுவான சட்டத்தைப் பின்பற்றுவது ஒருக்காலும் சாத்தியமில்லை.

பொது சிவில் சட்டம் இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள், ஜெயினர்கள், சுயமரியாதைத் திருமணம் செய்பவர்கள் போன்ற எல்லாருக்கும் எதிரானது தான். எனவே நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொது சிவில் சட்டத்தையும், இதனைக் கொண்டுவரத் துடிப் பவர்களையும் எதிர்த்து நிற்க வேண்டும். நாட்டைத் துண்டாட நினைக்கும் வகுப்புவாதிகளிடமிருந்து நாட்டைக் காக்க வேண்டும் என்றால் நியாயத்தின் குரல் உரத்து எழ வேண்டும்.



# பொது சிவில் சட்டம்

## ஏன் தேவையில்லை?

- டாக்டர் ஜாவீத் ஜமீல்
இஸ்லாமிய கல்வி, ஆராய்ச்சித் துறைத்தலைவர், மங்களூர் யனபோயா பல்கலைக்கழகம்

தமிழில் : U.முஹம்மது ஷாஜஹான்

**இந்துத்துவ அமைப்புகள்**

பொதுவான இந்து சமூகத்தினரிடம் முஸ்லிம்கள் ஆபத்தானவர்கள் என்ற கருத்தாக்கத்தை இந்துத்துவ அமைப்புகள் தொடர்ந்து உருவாக்கி வருகின்றனர். பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக முஸ்லிம் சமூகம் முன்னேறுவது இந்துக்களுக்கு ஆபத்து என்ற வெறுப்புப் பரப்புரையைப் பல ஆண்டுகளாகச் செய்து வருகின்றனர். தனியார் சட்டங்கள் மூலம் முஸ்லிம் சமூகம் கட்டுக் கோப்பான சமூகமாக இருப்பதை அவர்கள் விரும்பவில்லை.

**சந்தைப் பொருளாதார சக்திகள்**

மனித பலவீனங்களைத் தங்களின் வியாபார முதலீடாகப் பார்க்கும் இவர்களுக்கு மதங்களின் அடிப்படையில் உருவாகும் ஒழுக்கமான குடும்ப அமைப்பு சந்தைப் பொருளாதார சக்திகளின் லாப வெறிக்கு ஒரு தடையாக இருக்கிறது. குறிப்பாக இஸ்லாமிய மார்க்கத்தின் ஹலால், ஹராம் வரையறைகள் நுகர்விய கலாச்சாரத்திற்குப் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது.

**இடதுசாரி அமைப்புகள்**

கம்யூனிசத்தின் சமூக பொருளாதார சித்தாந்தங்களில் மதங்களுக்கு எந்த இடமும் இல்லை.

**மாநிலங்களுக்கான தனிச் சிறப்புச் சட்டப் பிரிவுகள்**

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் தேவைக்கேற்ப தனிச்சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. 371 - மராட்டியம், குஜராத், 371A - நாகலாந்து,

371B - அஸ்ஸாம், 371 C - மணிப்பூர், 371 D, 371 E ஆந்திரா - தெலுங்கானா, 371 F - சிக்கிம், 371G -மிசோராம், 371 I - கோவா

370 - ஜம்மு காஷ்மீரின் சிறப்புச் சட்டம் அண்மையில் நீக்கப்பட்டது. திரிபுரா மாநிலத்திற்கான பாதுகாப்புச் சிறப்புச் சட்டம் அண்மையில் இயற்றப்பட்டது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனியான ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறையில் உள்ளது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடக மாநிலங்களில் ஆட்சி மொழி இல்லை. பசுவதை, மது தொடர்பான சட்டங்களில் மாநிலங்களிடையே வேறுபாடு உள்ளது. அருணாச்சலப் பிரதேசம், மிசோராம், மேகாலயா, நாகலாந்து, திரிபுரா, சிக்கிம், கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் உணவுக்காக மாடுகளை அறுப்பது தடை இல்லை. இடஒதுக்கீடு, வருமானவரிச் சட்டங்களில் மாநிலங்களிடையே வேறுபாடுகள் உள்ளன.

## அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டும் நெறிமுறைகள்

அரசியலமைப்பின் இந்தத் தலைப்பில்தான் பொது சிவில் சட்டத்தைப் பற்றிய குறிப்பு உள்ளது. இந்தத் தலைப்பில் உள்ள விஷயங்களைக் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. உதாரணமாக, மாநிலங்கள் அனைத்து மட்டத்திலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்ற வேண்டும் என்பது ஒரு வழிகாட்டும் நெறிமுறை. ஆனால் நடைமுறையில் ஏழை பணக்காரர்களிடையே பொருளாதார இடைவெளி அதிகமாகிக் கொண்டே செல்கின்றது. Forbes நிறுவனம் வெளியிட்டுள்ள முதல் 100 உலக பணக்காரர்கள் பட்டியலில் சில இந்தியர்கள் இடம் பெற்றுள்ளனர். சில குறிப்பிட்ட விரல் விட்டு எண்ணக் கூடிய இந்தியர்களிடம் பெரும் சொத்து சேர்ந்துள்ளதை இப்பட்டியல் வெளிப்படுத்துகின்றது.

நவீன பொருளாதாரச் சந்தை மனிதனை ஒரு நுகர்வுப் பொருளாகப் பார்க்கிறது. நவீன பெண்ணியக் கோட்பாட்டினால் பெண்கள் அதிக துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றார்கள். ஆண்கள் இதனைப் பயன்படுத்தி பெண்களைப் போகப் பொருளாகப் பயன்படுத்துகின்றனர். மனிதர்களின் ஆரோக்கியம், அமைதியான வாழ்க்கை பற்றிய எந்தக் கவலையும் நவீன பொருளாதாரச் சந்தைக்கு இல்லை. இதன் விளைவாகக் கட்டுப்பாடற்ற பாலுறவு, ஒருபால் உறவு, விபச்சாரம், மது, போதை, சூதாட்டம் போன்ற சமூக தீமைகள் மலிந்து காணப்படுகின்றன. இத்தகைய தீமைகள் பல்வேறு நோய்களையும் பாலியல் வன்புணர்வு போன்ற குற்றச் செயல்களையும் அதிகப்படுத்தி உள்ளன.

ஆண்டுதோறும் உலகளவில் 70 இலட்சம் குழந்தைகள் கருவிலேயே கொல்லப்படுகின்றன. உதா (Utah) என்ற அமெரிக்க பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் 7% பெண்கள் 15க்கும் மேற்பட்ட ஆண்களுடன் பாலுறவில் உள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. அமெரிக்க மக்கள் தொகையில் 7.1% ஒருபால் உறவாளர்கள். Child Trends அமைப்பின் ஆய்வில், அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளில் 40% திருமணத்திற்கு வெளியேயான உறவில் பிறக்கிறார்கள். 24 இலட்சம் குழந்தைகள் ஒற்றைப் பெற்றோருடன் வளர்கிறார்கள் என்று தெரிவித்துள்ளனர். இந்தியாவிலும் இத்தகைய போக்குகள் உருவாகத் தொடங்கியுள்ளது. திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழும் ஆண் பெண் தொடர்பினால் பல கொலைகள் நடந்துள்ளன.

## பாதுகாப்பான வாழ்க்கைக்கு இஸ்லாமிய சமூக அமைப்பு பொருத்தமானது ஏன்?

நவீன மேற்கத்திய வாழ்க்கை முறை குடும்ப அமைப்பை விரும்புவதில்லை. அது தனி நபரை மையப்படுத்திய பொருளாதார நலன்களை மட்டுமே முன்னிலைப்படுத்துகின்றது. குடும்ப உறுப்பினர்கள், ஒட்டுமொத்த சமூகத்தின் பொருளாதார நலன்களும் மேம்பட இஸ்லாம் வழிகாட்டுகின்றது.

பாலியல் தொழில், மது, போதை விற்பனை, சூதாட்டத் தொழில்களுக்கு குடும்ப அமைப்பு தடையாக இருப்பதாக

நவீனத்துவம் கருதுகின்றது. கட்டுக்கோப்பான குடும்ப அமைப்புதான் சமூக அமைதியின் ஊற்றுக்கண் என்று இஸ்லாமிய வாழ்க்கை முறை கருதுகின்றது.

இந்தக் குடும்ப அமைப்பு பெண்களின் பாதுகாப்பு அரணாகும். மேலும் ஆண்கள், பெண்களின் இயற்கையான உடல் தேவைகளுக்கும் குழந்தைகளின் நல்வாழ்வுக்கும் பாலியல் நோய்களின் தடுப்பரணாக குடும்பம் உள்ளது. நவீன மேற்கத்திய வாழ்க்கை முறையில் பெண்களின் நிலை, பாலியல் தொழிலாளியாக, திருமணமாகாத பாலுறவு துணையாக, திருமணமாகாத தாயாக, ஒற்றைப் பெற்றோராக இருக்கின்ற சூழ்நிலை நிலவுகின்றது. இத்தகைய நிலைகளிலிருந்து இஸ்லாம் பெண்களைப் பாதுகாக்கின்றது.

இஸ்லாமிய மார்க்கத்தில் ஆண்கள், பெண்களின் கடமைகள் அவர்களின் இயற்கையான தன்மைகளைக் கருத்தில் கொண்டு வரையறுக்கப்பட்டு உள்ளன. ஆனால் நவீனத்துவமோ சந்தைப் பொருளாதாரத்தை மையப்படுத்தி அவர்களின் கடமைகளை வரையறுக்கின்றது. திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவை நவீனத்துவம் அனுமதிக்கிறது. ஆனால் பருவமடைந்த பெண்களின் திருமணத்தைத் தடுக்கின்றது. இஸ்லாம் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவைத் தடை செய்கிறது. பருவமடைந்த ஆண் பெண்களின் மனவளர்ச்சி பொருளாதார சுய சார்பைப் பொறுத்து திருமணத்தை அனுமதிக்கின்றது.

பலருடனான பாலியல் தொடர்பை நவீனத்துவம் அனுமதிக்கிறது. ஆனால் சட்டப்படியான பலதார திருமணத்தைத் தடுக்கின்றது. இஸ்லாம் பலருடன் பாலுறவு கொள்வதைத் தடுக்கிறது. பலதார மணத்தைச் சில நிபந்தனைகளுடன் அனுமதிக்கிறது. மனைவிகளிடையே நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். தந்தை தன்னுடைய அனைத்துக் குழந்தைகளுக்கும் சட்டப்படியான அனைத்து உரிமைகளையும் சமமாக வழங்க வேண்டும் என்பது போன்ற சில நிபந்தனைகளுடன் பலதார மணத்தை அனுமதிக்கின்றது. பெண்களுக்கு அதிகமான சுமைகளை நவீனத்துவம் சுமத்துகின்றது. இதனால் குடும்ப வாழ்வு, குழந்தைகளின் நலன்கள் பாதிக்கப்படுகின்றன. பெண்களுக்குச் சுயமாக சம்பாதிக்கும் உரிமையை இஸ்லாம் வழங்குகின்றது. ஆனாலும் குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பை கணவனிடமே ஒப்படைக்கின்றது.

## இஸ்லாத்தில் பெண்களின் அந்தஸ்து

உடல் ரீதியாக ஆண் பெண் ஒரே மாதிரியானவர்கள் இல்லை. பெண்களுக்கான உடல் சுமைகள் (கருவுறுதல், பாலூட்டுதல்) அதிகம். ஆகையால் பொருளாதாரச் சுமை ஆண்களிடம் இருப்பதுதான் நியாயமானது. பெண்களுக்கான கல்வி உரிமை, மணமகனைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம், விவாகரத்து கோரும் உரிமை, திருமணத்தின் போது மணமகன் தரும் மஹர் பெறும் உரிமை, கணவனின் மரணத்திற்குப் பிறகு அல்லது விவாகரத்துக்குப் பிறகு மறுமணம் செய்யும் உரிமை, சொத்துரிமை ஆகியவற்றை இஸ்லாம் சட்டப்பூர்வமாக வழங்குகின்றது. பெண் குழந்தைகள் கொலை செய்யப்படுவதைத் தடை செய்கிறது. இஸ்லாமிய வாழ்க்கை முறையில் தாயின் அந்தஸ்து தந்தையை விட ஒரு படி மேலே இருக்கிறது.

## விவாகரத்து

இஸ்லாம் மிகச் சிறப்பான விவாகரத்து முறையைக் கொண்டுள்ளது. திருக்குர்ஆனின் வழிகாட்டலின்படி மூன்று மாதம் தம்பதிகள் தங்களுக்குள் சமரசம் செய்து கொள்ள வழிவகை உள்ளது. அதன் பிறகான இத்தா (தனித்திருத்தல்) காலம் பின்வரும் காரணங்களால் முக்கியமானது.

1. கணவன் உடனடியாகக் கைவிடும் நிலையிலிருந்து பாதுகாப்பு
2. கருவில் உள்ள குழந்தை
3. பிறந்த குழந்தையின் தந்தையை அறிதல்
4. கருவுற்ற பெண்ணின் இத்தா காலம் குழந்தைப் பேறு வரை தொடரும்
5. குழந்தைப் பேறு, பாலூட்டும் காலம் முழுவதும் கணவன்தான் பொருளாதாரத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

6. விவாகரத்தான பிறகு பிறக்கும் ஆண் குழந்தை முதல் 7 ஆண்டுகள் தாயிடம் இருக்க வேண்டும். பெண் குழந்தை அவர்களின் திருமணம் வரை தாயுடன் இருக்கலாம். இந்தக் காலம் முழுவதும் தந்தைதான் அவர்களின் செலவுகளுக்குப் பொறுப்பு.

7. இரண்டு தரப்பும் ஒத்துழைக்கும் பட்சத்தில் இத்தா காலத்தில் சமரசம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

### பலதார மணம் Vs பலருடன் பாலுறவு

உலகம் முழுவதும் பலதார மணத்தை ஆட்சேபிக்கும் பலர். ஆண்கள் பல பெண்களுடன் பாலியல் தொடர்பு வைத்துக் கொள்வதை ஆட்சேபிப்பதில்லை. சட்டப்பூர்வமான எவ்வித நடவடிக்கைகளுக்கும் உட்படுவதில்லை. ஆனால் சட்டப்படியான இரண்டாவது திருமணத்திற்குப் பல நாடுகளில் தடை உள்ளது. இது ஒரு விந்தையான நிலைப்பாடு. பலதார மணம் பெண்களுக்குச் சட்டப்பூர்வ அந்தஸ்தையும் சமூக அந்தஸ்தையும் தருகின்றது.

### பலதார மணத்தின் காரணங்கள்

மனைவியின் உடல்நிலை குறைபாடு, குழந்தையின் ஆண் / பெண் பிறப்பு விகிதத்தில் பெண்களின் எண்ணிக்கை மேலோங்கி இருக்கும் நாடுகளில் பெண்களின் திருமண வாழ்க்கையை உறுதி செய்ய ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணங்கள் புரிய ஆண்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏன் பெண்களுக்குப் பல கணவர்கள் இருக்கக் கூடாதா? என்ற கேள்வி எழலாம். ஆனால் பெண்களுக்குப் பல கணவர்கள் இருந்தால் யாருடைய குழந்தை என்பதில் குழப்பம் வரலாம். இதனால் குழந்தைகளின் மன நலம் பாதிக்கப்படும். ஆண்களும் பெண்களும் பலருடன் பாலியல் தொடர்பு கொண்டால் சமூகத்தில் பெரும் பிரச்னைகள் உருவெடுக்கும். இஸ்லாம் ஒருதார மணத்தை விரும்புகின்றது. பலதார மணம் சூழ்நிலைகளைப் பொறுத்து வழங்கப்பட்ட அனுமதி மட்டுமே ஆகும். இந்திய முஸ்லிம்களில் பலதார மணம் மிகவும் சொற்ப எண்ணிக்கையில் உள்ளது.

### மஹர் – திருமணக் கொடை

திருமணத்தின் போது மணமகன் தரப்பிலிருந்து மணப்பெண்ணுக்குக் கொடுக்கப்படும் தொகை அல்லது பொருள்கள் மஹர் எனப்படும். விவாகரத்தின் போது கணவன் தன்னுடைய மனைவிக்கு அதிகமான தொகையைக் கொடுத்து பிரிந்து செல்ல இஸ்லாம் எடுத்துரைக்கின்றது.

### அண்மைக்கால சட்டத்திருத்தங்களும் விளைவுகளும்

#### லவ் ஜிஹாத்

முஸ்லிம் ஆண்கள் இந்து சமூகப் பெண்களைத் திருமணம் செய்வதைச் சட்ட விரோதமாக உ.பி. அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் மதமாற்றத்தைத் தடுப்பதாக உ.பி. அரசு கருதுகின்றது.

இந்து ஆண்கள் முஸ்லிம் பெண்களைத் திருமணம் செய்வதை இந்துத்துவ அமைப்புகள் தடுப்பதில்லை. முஸ்லிம் சமூகம் இதை ஏன் லவ் ஜிஹாதாகக் கருதக் கூடாது? இந்து சமூகத்தில் பெண்களின் பிறப்பு விகிதம் பல மாநிலங்களில் சரிவில் உள்ளது. ஆகையால் லவ் ஜிஹாதை ஏன் நீண்ட கால சதித் திட்டமாகப் பார்க்கக் கூடாது. தற்போதைய லவ் ஜிஹாத் சட்டம் மதரீதியாகவும் பாலின ரீதியாகவும் அநீதி இழைப்பதாக உள்ளது.

#### ஒருபால் உறவு

ஒருபால் உறவு திருமணத்தை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கலாமா? வேண்டாமா? என்ற வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஒருபால் உறவுக்கு சட்டப்பூர்வ அனுமதியை ஏற்கனவே உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது.

இயற்கைக்கு எதிரான இந்தப் பழக்கத்தினால் எய்ட்ஸ் போன்ற நோய்கள் ஏற்பட 8 மடங்கு வாய்ப்பு இருக்கிறது. இதை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஒருபால் உறவாளர்களுக்கு மனநல சிகிச்சையும், அவர்கள் தாக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பும் அரசு வழங்க வேண்டும்.

**முத்தலாக்**

விவாகரத்தில் தவறு செய்யும் கணவனுக்குக் கொடுக்கப்படும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை எவ்விதத்திலும் விவாகரத்தான மனைவிக்கும் குழந்தைகளுக்கும் உதவாது. சிக்கலை அதிகப்படுத்தும்.

இரு குழந்தைகள் என்ற சட்டம், கருக் கலைப்புகளையும் கருக்கொலைகளையும் அதிகப்படுத்தும்.

இந்தியாவைப் பொறுத்தவரை மதச் சார்பின்மை என்பது அனைத்து மக்களும் தாங்கள் விரும்பும் மதத்தைப் பின்பற்றவும் பரப்புரை செய்யவும் உரிமை உண்டு. இந்திய அரசியலமைப்பின் 15, 16, 25-29 பிரிவுகளில் மதச்சார்பின்மை பற்றிய விளக்கம் கூறப்பட்டுள்ளது. இந்திய மக்களில் பெரும்பான்மையோர் மதநம்பிக்கை உள்ளவர்களாகவும் வலுவான குடும்ப அமைப்பை விரும்புபவர்களாகவும் இருக்கிறார்கள்.

**பொது சிவில் சட்டம் எவ்வடிவில் வந்தாலும் இந்திய முஸ்லிம்கள் பின்வரும் காரணங்களால் அதை எதிர்ப்பார்கள்**

★ நவீன மேற்கத்திய பாணியிலான பாலியல் சுதந்திரம் ஏற்பட வழிவகை உள்ளது.

★ முஸ்லிம் தனியார் சட்டத்தில் வாரிசுரிமை, திருமணம், விவாகரத்து போன்றவற்றில் மாற்றம் கொண்டு வருகின்றது.

★ குடும்பக் கட்டுப்பாடு தற்காலிகத் தீர்வாக ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆனால் இரு குழந்தைத் திட்டம், கருக் கலைப்பை அதிகப்படுத்தும். பெண் குழந்தைகள் கருவிலேயே கொல்லப்படுவார்கள்.

★ வக்ஃபு சொத்துகளை முஸ்லிம் சமூக மேம்பாட்டிற்குப் பயன்படுத்த முடியாது.

★ தொழுகை, பாங்கு, நோன்பு, ஹஜ் பயணத்திற்குத் தடை ஏற்படும் சூழல் உருவாகும்.

**முஸ்லிம் சமூகத்திற்கு..**

முஸ்லிம்கள் தங்களுடைய மார்க்கச் சட்டங்களை முறையாகப் பின்பற்ற வேண்டும். பெண்களுக்குச் சொத்துப் பங்கீடு, விவாகரத்து போன்றவற்றில் சில இடங்களில் அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது. இதை முஸ்லிம் சமூகம் சீர் செய்ய வேண்டும்.

**பொதுமக்களுக்கு..**

★ முஸ்லிம் சமூகம் அனைத்து மத சமூகங்களுடனும் இணைந்து பல நல்ல காரியங்களில் செயல்பட்டு வருகின்றது. மத வெறுப்புப் பரப்புரையை நீங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

★ ஒட்டுமொத்த மனிதகுல அழிவைத் தடுக்க, நம்முடைய தத்துவங்களை மீள் பார்வை செய்ய வேண்டும்.

★ இந்திய குடும்ப அமைப்பைப் பாதுகாக்க வேண்டும்.

★ சமூக பொருளாதார நிலைகளில் குடும்ப அமைப்பு வலுவானதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

★ குடும்ப அமைப்பின் மீது எவ்வித தாக்குதல்கள் நடந்தாலும் அது எதிர்க்கப்பட வேண்டும்.

★ மருத்துவப் பணி, ஆசிரியர் பணி, சமூகப் பணிகளில் பெண்களுக்கான வேலை வாய்ப்புகளை அதிகளவில் உருவாக்க வேண்டும்.

மது, திருமணத்திற்கு அப்பாற்பட்ட பாலுறவு, சூதாட்டம், விபச்சாரம், ஆபாச வலைதளங்கள், ஒருபால் உறவு போன்றவை தடை செய்யப்பட வேண்டுமா? என்ற கேள்வியுடன் தேசிய அளவில் பொது கருத்துக் கணிப்பை தேசிய சட்ட ஆணையம் நடத்த முன்வர வேண்டும்.

பொது சிவில் சட்டத்திற்கு கடந்த 2021 ஆம் ஆண்டில் தேசிய சட்ட ஆணையம் ஆதரவு தெரிவிக்கவில்லை. வேற்றுமையில் ஒற்றுமை என்பது இந்தியாவின் அடிநாதம். பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவது அமைதியை சீர்குலைக்கும். எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் பொது சிவில் சட்டத்தை ஆய்வு செய்தால் அவர்களுக்குத் தீர்க்க வேண்டிய நிலை வரும். முஸ்லிம்கள் குர்ஆன், நபி(ஸல்) வழிமுறைகளுக்கு மாற்றமான சட்டங்களை ஒருபோதும் ஆதரிக்க மாட்டார்கள்.




# SYED TRAVELS




## HAJ & UMRA SERVICES

**Customized package available for Family and Groups**

**Individual Umra visa Stamping with Medical & Insurance coverage available**

**Monthly umra starts from August - Rs.90,000 only**

- Makkah Star Hotel Accommodation - (Golden Najd or similar with Free Transportation from Hotel to Haram)
- Madina Star Hotel Accommodation (Hotel Guest Time or similar)
- 3 Times Delicious Meal By TAMIL NADU CHEF
- Saudia or Any available Airlines
- Transportation by Luxurious Bus
- All ziyarat(s) in Makkah and Madina
- 5 Ltr ZAMZAM
- Medium Bag, Passport Bag, Chappal Bag, Dua Kitab & Tawaf Tasbeeh
- Hijab Scarf for ladies

## STUDY ABROAD

We are pleased to offer the following services to our esteemed customers...

- Study abroad in different countries
- Education Consultancy Services
- Study MBBS in Russia.
- Graduation & Post Graduation courses abroad in prestigious universities in following countries...

  Australia, Canada, Germany, Switzerland, UK, UAE and many more countries

## TRAVEL SERVICES

- JOB SEARCH E-VISA STAMPING DONE FOR DUBAI

1. Ticketing - National & International.
2. Holiday Packages - Both Honeymoon / Family.
3. Stamping of E-Visa Processing to nearly 26 countries.
4. Passport Processing - Both New and Re-newal.
5. All Govt related 23+ Services.

for more details contact us directly

**Mobile: +91 988427 8587 / +91 9150 445520**

**Email :syedtravels@yahoo.in**

Address : 10 Links Plaza, (Opposite DG Vaishnava College),
Dr. Radhakrishnan Nagar, Poonamallee High Road,
Arumbakkam, Chennai - 600 106.

# மணிப்பூர் நெருப்பில் குளிர்காய்வது யார்?

- சே.ஹபிபுர் ரஹ்மான்

பல ஆண்டு காலமாகச் சகோதரர்களாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்துவந்த மணிப்பூரின் இந்துக்களான மெய்தேயி, கிறித்தவர்களான குக்கி சமூகங்களுக்கு இடையே கடந்த மே 3ஆம் தேதி மாநிலத்தின் பல பகுதிகளில் வன்முறை வெடித்தது. இந்த வன்முறை நெருப்பு இன்று வரை அணையாமல் கொழுந்து விட்டு எரிந்து கொண்டு தான் இருக்கிறது. மணிப்பூரின் வரலாற்றில் இதுவரை இன, சமூக, மதங்களுக்கு இடையேயான வன்முறைகள் நடந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இதுவே இந்தியாவில் 2000க்குப் பிறகு அதிக மக்கள் கொல்லப்பட்டுள்ள மூன்றாவது வன்முறை வெறியாட்டமாகும்.

இந்த வன்முறை நெருப்பில் ஜூலை 3 வரை இருநூறுக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர் (உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகம் எனக் கூறப்படுகிறது). அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை இழந்து முன்னூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட முகாம்களிலும் வனப் பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். லட்சக் கணக்கான குழந்தைகள், மாணவர்கள் கல்வியை இழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான கடைகள், வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. இந்த வன்முறையில் 300க்கும் மேற்பட்ட தேவாலயங்கள், தேவாலயங்களின் 70 நிர்வாகக் கட்டிடங்கள், பள்ளிகள் தீயிடப்பட்டுள்ளன என்றும் நாற்பதற்கும் மேற்பட்ட கோயில்கள் தாக்கப் பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அங்கு இனக் கலவரங்களுக்கு மத வழிபாட்டுத் தலங்கள் இரையாக்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

### மணிப்பூர் மாநிலம்

மணிப்பூர் இந்தியாவின் வடகிழக்கு பகுதியிலுள்ள சிறிய மாநிலம். (2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி) இதன் மொத்த மக்கள்தொகையே 30 லட்சத்திற்கும் குறைவு (28.56 லட்சம்) தான். அதில் 41.39% இந்துக்கள், 41.29% பழங்குடியின கிறித்தவர்கள், 8.40% சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், மதமற்றவர்கள். மொத்த மக்கள்தொகையில் 53% மெய்தேயினர். இவர்கள் மணிப்பூரின் ஆதிக்க சாதியினர். இவர்களில் 10% கிறித்தவர்கள் மீதமுள்ளவர்கள் இந்துகள்.






**மலைப்பகுதிகளில் உள்ள அடர்ந்த காடுகள்தான் 75% நிலப்பரப்பு. அதில் பல இடங்களில் சிதறி வாழும் பிற்படுத்தப்பட்ட பழங்குடியினருக்கான அடிப்படைத் தேவைகளான மருத்துவமனைகள், கல்விக்கூடங்கள் உயர்கல்வி நிறுவனங்கள் போன்ற எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத நிலைதான் இருக்கிறது.**

### எதற்காக இந்த வன்முறை?

மணிப்பூர் மாநிலம் 75% அடர்ந்த காடுகளையுடைய மலைப் பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்தப் பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட பழங்குடியினரான குக்கி சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். (சமதளப் பகுதிகள் 10% மட்டுமே இருக்கிறது.) மெய்தேயி சமூகத்தினர்கள் சமதளப் பகுதி(நகரங்)களில் வாழ்ந்து வருகின்றனர். அம்மாநிலச் சட்டப்படி மெய்தேயி சமூகத்தினரால் மலைப்பகுதிகளில் நிலம் வாங்க முடியாது.

அதற்காகத் தங்களையும் பழங்குடியினர் பிரிவில் சேர்க்க வேண்டி மெய்தேயி சமூகத்தினர் ஏறத்தாழ 15 ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். அதற்கு குக்கி சமூகத்தினர் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். மணிப்பூரின் பல முன்னாள் முதல்வர்களும் மெய்தேயி சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் இந்தக் கோரிக்கையின் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு இதைப் பெரிதளவு கண்டு கொள்ளாமல் விட்டிருந்தனர்.

இந்நிலையில் அதுவரை மணிப்பூரின் ஆட்சிக் கட்டிலில் ஏறவியலாத பாஜக இந்தப் பிரச்னையைக் கையிலெடுத்தது. 2022 தேர்தலில் தாங்கள் வெற்றிபெற்றால் மெய்தேயி மக்களைப் பழங்குடியினரின் பட்டியலில் இணைப்போம் எனும் தேர்தல் வாக்குறுதியை பாஜக அளித்தது. பின் ஆட்சிக்கட்டிலிலும் அமர்ந்தது. அதன் பிறகு மெய்தேயிக்களின் இக்கோரிக்கையும் அதற்கான பழங்குடியினரின் எதிர்ப்பும் வலுக்கத் தொடங்கியது.

கடந்த ஏப்ரல் 19 அன்று மெய்தேயிக்கள் தொடர்ந்த வழக்கிற்கு தீர்ப்பளித்த மணிப்பூர் உயர்நீதிமன்றம் மாநில அரசை நான்கு வாரத்திற்குள் மெய்தேயி மக்களைப் பழங்குடியினரில் சேர்ப்பதைப் பரிசீலிக்கவும் அதை ஒன்றிய அரசின் பரிசீலனைக்காக அனுப்பவும் கேட்டுக் கொண்டது.

இதையடுத்து கடந்த மே 3 அன்று மாநிலம் முழுவதும் பல இடங்களில் பழங்குடியின மாணவ அமைப்பைச் சார்ந்தவர்கள் ஒற்றுமை அணிவகுப்புப் பேரணியை நடத்தினர். அதில் சுராச்சந்பூர் மாவட்டத்தின் டோர்பாங் பகுதியில் நடைபெற்ற அமைதிப் பேரணியில் பற்றிய வன்முறை நெருப்பு அம்மாநிலம் முழுவதும் பரவியது.

### மற்றொரு கோணம்

ஏன் மணிப்பூரின் 75% நிலப்பரப்பை வெறும் 41% மட்டுமே இருக்கக்கூடிய பழங்குடியினர் மட்டும் பயன்படுத்தும் நிலை இருக்கிறது. அதனை அனைவரும் பகிர்ந்து பயன்படுத்திக் கொண்டாலே இந்த பிரச்னைக்கான அவசியமே இல்லையே என நீங்கள் கருதலாம்.

மலைப்பகுதிகளில் உள்ள அடர்ந்த காடுகள்தான் 75% நிலப்பரப்பு. அதில் பல இடங்களில் சிதறி வாழும் பிற்படுத்தப்பட்ட பழங்குடியினருக்கான அடிப்படைத் தேவைகளான மருத்துவமனைகள், கல்விக்கூடங்கள் உயர் கல்வி நிறுவனங்கள் போன்ற எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத நிலைதான் இருக்கிறது.

அதாவது கல்வி நிறுவனங்கள் மருத்துவ மனைகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கும் அம்மக்கள் மெய் தேயிக்கள் வாழும் நகரப் பகுதிகளுக்கே செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி வந்துள்ளனர். விஷயம் என்னவென்றால் இத்தனை காலம், ஆட்சிகள் கடந்தும் அந்த குக்கி மக்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் எனும் இடத்திலேயேதான் வைக்கப்பட்டுள்ளனர். இதுவே அவர்கள் தங்களிடம் உள்ள நிலத் தைக் காப்பாற்றிக் கொள்வதற்கான உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதன் காரண மாகச் சொல்லப்படுகிறது.

## ஒன்றிய, மாநில அரசுகளின் மெத்தனப் போக்கு

மணிப்பூரில் மே 3ஆம் தேதி தொடங் கிய இந்த இன மோதல் பின் சாதி கலவரமாக மாறி தற்போது மதக் கலவரமாக விஸ்வ ரூபம் எடுத்துள்ளது. இந்தப் பிரச்சனையின் தொடக்கமான குக்கிகளின் அமைதி ஊர் வலம் மிகவும் அமைதியாகவும் ஜனநாயக ரீதியில்தான் நடத்தப்பட்டது என்றும் அந்த அமைதிப் பேரணிக்குள் நுழைக்கப்பட்ட அடிப்படைவாதிகளாலேயே இந்த இனக் கலவரம் உருவாக்கப்பட்டது எனவும் கூறப் படுகிறது. இக்கலவரத்தில் இரு பக்கமும் இழப்புகள் இருந்தாலும் குக்கி பழங்குடி யினர் தான் மிகவும் அதிக அளவில் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இந்தியாவின் வரலாற்றில் மிக அதிக நாள்கள் நடைபெற்றுள்ள மதக் கலவரங் களில் இந்த மணிப்பூர் கலவரம் முதல் இடத்தைப் பிடிக்கிறது. இந்தியாவில் இதற்கு முன் நடைபெற்ற இது போன்ற பல கலவரங்களும் வெகு விரைவில் கட் டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆனால் மாநில காவல்துறை, ராணுவப் படையினர், துணை ராணுவப் படையினர் என இவ்வளவு படைபலங்களை வைத்துக் கொண்டும் இந்தக் கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை எனச் சொல்வது அப்பட்டமான பொய்யாகவும் மத்தியிலும் அம்மாநிலத்திலும் நடைபெறும் மதவாத அரசினால் பழங்குடியின மக்களைப் படு கொலை செய்வதற்கான அரசின் அனுமதிச் சீட்டாகவே தெரிகிறது.



மணிப்பூர் பாஜக ஆட்சியின் முதல்வர் ஃபைரோன் சிங் கையறு நிலையில் இருப்ப தாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அது வெறும் கட்டமைக்கப்பட்ட பிம்பம் எனவும் முதல்வருக்கு இவ்வன்முறையைத் தடுப்பதில் ஆர்வம் இல்லை எனவும் அவர் பழங்குடியினருக்கு எதிரான மனப்பான் மையைக் கொண்டுள்ளவர் என்றும் விமர் சிக்கப்படுகிறது. ஒன்றிய அரசும் மாநில அரசும் நினைத்திருந்தால் இக்கலவரத்தை எப்போதோ முடிவுக்குக் கொண்டு வந்திருக் கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்ய வில்லை.

இந்த இனக்கலவரத்தில் மணிப்பூர் பற்றி எரிந்து கொண்டிருந்த நேரத்தில் கூட அதைக் குறித்த எள்ளளவு கவலையும் இல்லாமல் ஆளும் ஒன்றிய அரசு தனது மொத்த ஆற்றலையும் கலவரத்தை அடக்கப் பயன்படுத்துவதற்கு மாறாகக் கர்நாடகத் தேர்தல் பரப்புரைக்கே பயன்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு ஒரு மாநிலமே பற்றி எரிந்து கொண்டிருக்கும் நிலையில் அதைக் கண்டுகொள்ளாமல் மற்றொரு மாநிலத்தின் தேர்தல் பரப் புரைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதன் அவசியம் என்ன?

கர்நாடகத் தேர்தலை முடித்துவிட்டு சாவகாசமாக மணிப்பூர் சென்ற உள்துறை அமைச்சர் அமித்ஷா கலவரம் உடனடி யாக கட்டுக்குள் வந்துவிடும் எனச்




வன்முறைகள் இவ்வளவு நாள்களாக நடந்த நிலையில் துருக்கியின் நிலநடுக்கம், குஜராத்தின் புயல் உள்ளிட்ட பல விசயங்களை தன்னுடைய மன்கிபாத் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி இந்த வன்முறையைப் பற்றி எங்கும் வாயைத் திறக்கவே இல்லை.

சொல்வதற்கு மாறாகக் கலவரம் 15 நாள்களில் அமைதி நிலை திரும்ப நடவடிக்கை எடுக்கப் படும் எனக் கூறினார். இவ்வளவு பெரிய நாட்டில் மாபெரும் படைகளை வைத்துக் கொண்டு சிறிய மணிப்பூர் மாநிலத்தின் இனக் கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வர 15 நாள்கள் ஆகும் என அமித்ஷா சொன்னது அவர் கலவரத்தைக் கட்டுப் படுத்தச் சென்றதாகத் தெரியவில்லை எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றவே சென் றிருக்கிறார் போலும்! என சமூக ஆர்வலர்கள் விமர்சித்துள்ளனர். (ஆனால் அவர் சொன்ன பதினைந்து நாள்களையும் தாண்டி வன்முறை வெறியாட்டங்கள் தற்போது வரை நடந்து கொண்டிருக்கிறது என்பது வேறு!)

வன்முறைகள் இவ்வளவு நாள்களாக நடந்த நிலையில் துருக்கியின் நிலநடுக்கம், குஜராத்தின் புயல் உள்ளிட்ட பல விசயங்களை தன்னுடைய மன்கிபாத் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி இந்த வன்முறையைப் பற்றி எங்கும் வாயைத் திறக்கவே இல்லை. மேலும் எதிர்க்கட்சிகள் இந்த பிரச்னையைக் குறித்துப் பேச வேண்டி அனுமதி கோரிய நிலையில் அதைப் புறந்தள்ளிவிட்டு அமெரிக் காவிற்குப் பறந்திருக்கிறார். அவர் இன்றும் இந்த இனக் கலவரத்தைப் பற்றியும் அதைத் தடுப்பதைக் குறித்தும் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக வலைதளங்களில் ஆளுங்கட்சி யையும் பிரதமரையும் ஒன்றிய அரசை விமர்சித்தும் காஷ்மீர் போன்ற உள்நாட்டுப் பிரச்னைகளைப் பற்றியும் வரக்கூடிய விஷயங்கள் அது உண்மையாக இருப்பினும் சரியே அவை அனைத்தும் கடுமை யாகத் தணிக்கை செய்யப்படுகின்றன. ஆனால் பல அங்கீகரிக்கப்பட்ட டுவிட்டர் கணக்குகள் உட்படப் பலர் தொடர்ந்து குக்கி பழங்குடியின மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து செய்துவரும் வெறுப்புப் பரப்புரைக்கு எதிராக எவ்வித தணிக்கை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஒன்றிய அரசிற்கு இவ்வெறுப்பு நெருப்பை அணைப்பதில் துளியளவும் ஆர்வம் இல்லை என்பதை நிரூபிப்பதாகவே இந்நிகழ்வுகள் உள்ளன.

இன்னும் இந்தக் கலவரம் ஒன்றிய, மாநில அரசின் உதவியுடனே நடக்கிறது என்பதனை நிரூபிக்கும் விதமாகப் பல ஆதாரங்கள் சமூக ஊடகங்களில் வலம் வந்துகொண் டிருக்கின்றன. அவற்றைப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.

## அமைதி திரும்ப வேண்டும்

மணிப்பூர் மக்கள் தங்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதாகவும் உடனடியாக அரசிடமிருந்து நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றால் அதன் விளைவுகள் எண்ணவியலாத அள விற்கு இருக்கும் எனவும் சமூக வலைதளங் களில் கதறி வருகின்றனர். ஒன்றிய அரசும் அம்மாநில அரசும் இணைந்து உடனடியாக இக்கலவரத்தைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை களை மேற்கொண்டு மீண்டும் மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்பதே அனைத்து மக்களின் ஒருமித்த கோரிக்கையாக உள்ளது.



# 2024 நாடாளுமன்றத் தேர்தல்: எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை சாத்தியமா?

- சேயன் இப்ராகிம்

கடந்த 23.6.23 அன்று பீகாரின் தலை நகரான பாட்னாவில் 17 எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி எதிர்வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றுபட்டுச் செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசனை நடத்தி உள்ளனர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகளில் காங்கிரஸ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டும் தேசியக் கட்சிகள். பிற அனைத்தும் மாநிலக் கட்சிகளே. இவற்றில் பெரும்பாலான கட்சிகள் ஏற்கனவே காங்கிரஸ் கட்சியுடன் மாநிலங்களில் தொகுதி உடன்பாடு கொண்டிருக்கும் கட்சிகளே. சமாஜ்வாதி, ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ் ஆகியவை காங்கிரசுடன் தொகுதி உடன்பாடோ, கூட்டணியோ வைத்துக் கொள்ளாத கட்சிகள்.

வேறு சில மாநிலக் கட்சிகள், பாஜகவுடன் தொகுதி உடன்பாடு கொண்டிருக்கும் கட்சிகள் அல்லது தொகுதி உடன்பாடு செய்து கொள்ள விரும்பும் கட்சிகள். அவை:

அஇஅதிமுக - தமிழ்நாடு

சிவசேனா (ஷிண்டே) - மகாராஷ்டிரம்

தெலுங்கு தேசம் - ஆந்திரா

மதச்சார்பற்ற ஜனதா தளம் - கர்நாடகா

அகாலி தளம் - பஞ்சாப்

தெலுங்கானாவிலுள்ள ஆளும் கட்சியான பாரதிய ராஷ்ட்ரிய சமாதி (BRS) பாஜகவைக் கடுமையாக எதிர்த்த போதிலும், காங்கிரஸுடன் இணைந்து தேர்தலைச் சந்திக்க அக்கட்சி விரும்பவில்லை. உ.பி.யின் மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சியின் நிலையும் அதுதான்.

ஒரிசாவின் ஆளும் கட்சியான பிஜு ஜனதா தளமும், ஆந்திராவில் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸும் பாஜக, காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுடன் தேர்தல் உறவு கொள்ளாமல் தனித்தே போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளன.

### தற்போதைய நிலவரம்

**பாஜக ஆட்சிப் பொறுப்பில் உள்ள மாநிலங்கள்:** உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், உத்தரகாண்ட், குஜராத், கோவா, ஹரியானா, 7 வடகிழக்கு மாநிலங்கள், மகா ராஷ்டிரா (சிவசேனை - ஷிண்டே அணியுடன் கூட்டணி ஆட்சி)

**காங்கிரஸ் ஆட்சி புரியும் மாநிலங்கள் :** கர்நாடகா, சத்தீஸ்கர், ஹிமாச்சலப் பிரதேசம், இராஜஸ்தான், ஜார்க்கண்ட் (ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியுடன் கூட்டணி ஆட்சி), பீகார் (ஐக்கிய ஜனதா தளத்துடன் கூட்டணி ஆட்சி)

| மாநிலக் கட்சிகள் | ஆட்சி புரியும் மாநிலங்கள் |
| --- | --- |

1. தமிழ்நாடு - திமுக - காங்கிரஸ் கூட்டணி
2. கேரளா - மா.கம்யூனிஸ்ட் - பாஜக எதிர்ப்பு
3. ஆந்திரா - ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் - தனித்துப் போட்டி
4. தெலுங்கானா - பிஆர்எஸ் - தனித்துப் போட்டி

5. மேற்கு வங்காளம் - திரிணாமுல் காங்கிரஸ் - பாஜக எதிர்ப்பு
6. ஒரிசா - பிஜு ஜனதா தளம் - தனித்துப் போட்டி
7. பஞ்சாப் - ஆம் ஆத்மி - பாஜக எதிர்ப்பு
8. டெல்லி - ஆம் ஆத்மி - பாஜக எதிர்ப்பு

குறிப்பு : ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்று வருகிறது.

### காங்கிரஸின் வாய்ப்புகள்

**1.** தமிழ்நாடு, பீகார், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் காங் கிரஸ் தற்போது தேர்தல் உறவு கொண்டுள்ள கட்சிகள் வருகிற 2024 நாடாளுமன்றத் தேர்த லிலும் உறவினைத் தொடரும் என நிச்சய மாகத் தெரிகிறது.

**2.** ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தேசிய மாநாட்டுக் கட்சியுடனும், மக்கள் ஜனநாயகக் கட்சியுடனும் காங்கிரஸ் கூட்டணி சேர வாய்ப்புகள் உள்ளன.

**3.** உத்தரப் பிரதேசத்தில், சமாஜ் வாதிக் கட்சியுடன் காங்கிரஸ் கூட்டணி வைக்க ஐம்பது விழுக்காடு வாய்ப்புகள் உள்ளன.

**4.** ஆம் ஆத்மி கட்சி எதிர்க் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள போதிலும், அக்கட்சியுடன் காங்கிரஸ் கூட்டணி அமைக்கும் என்பது நிச்சயமில்லை. கடந்த காலத்தில் இந்த இரு கட்சிகளும் ஒன்றையொன்று கடுமையாக விமர்சித்து வந்தவை. இவை கூட்டணிக்கு தடையாக உள்ளன. தவிரவும், டெல்லியில் மாநில ஆளுநருக்கு நிர்வாகத்தில் அதிக அதிகாரங்கள் வழங்க வகை செய்யும் ஓர் அவசரச் சட்டத்தை ஒன்றிய அரசு பிறப்பித்துள்ளது. இச்சட்டம் மாநிலங்கள் அவையில் தாக்கல் செய்யப்படும் போது அதற்கு எதிராக வாக்களிக்க வேண்டுமென ஆம் ஆத்மி எதிர்க்கட்சிகளைக் கேட்டுக் கொண்டது. காங்கிரஸ் தவிர பிற கட்சிகள் அனைத்தும் இந்தச் சட்ட மசோதாவிற்கு எதிராக வாக்களிப்போம் என அறிவித்துள்ளன. ஆனால் காங்கிரஸ் கட்சி இந்த விஷயத்தில் தனது நிலைப்பாட்டை இதுவரை தெரிவிக்கவில்லை. இதனால் ஆம் ஆத்மி கட்சி அதிருப்தி அடைந்துள்ளது.

**5.** மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், இராஜஸ் தான், குஜராத், கோவா, உத்தரகாண்ட், அஸ் ஸாம், ஹிமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, ஹரியானா ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கும், பாஜகவுக்கும் தான் நேரடிப் போட்டி. இந்த மாநிலங்களில் பலம் பொருந்திய மாநிலக் கட்சிகள் எதுவுமில்லை.

**6.** கடந்த 2019 பொதுத் தேர்தலின் போது பாஜக 37.7 விழுக்காடு வாக்குகளைப் பெற்று 303 இடங்களில் வெற்றி பெற்றது. இந்த 303 இடங்களில், 90 விழுக்காடு இடங்கள் உ.பி, ம.பி, சத்தீஸ்கர், குஜராத், இராஜஸ்தான், டெல்லி, கோவா, பீகார், மகா ராஷ்ட்டிரா, ஹரியானா, உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களிலிருந்து கிடைத்தன. எனவே இந்த மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றால் தவிர பாஜ கவைத் தோற்கடிக்க முடியாது.

**7.** 80 இடங்களைக் கொண்டுள்ள உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி பலவீனமாக உள்ளது. அங்கு சமாஜ்வாதிக் கட்சியுடன் கூட்டணி அமைத்தால் மட்டுமே பாஜகவைத் தோற்கடிக்க முடியும்.

### காங்கிரஸ் கட்சி செய்ய வேண்டியவை

**1.** குஜராத், இராஜஸ்தான் ஆகிய மாநி லங்களில் தற்போது நிலவும் உட்கட்சிப் பிரச்னைகளைக் காங்கிரஸ் தீர்க்க வேண்டும்.

**2.** ஆம் ஆத்மி கட்சியுடனான கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்த்து அக்கட்சி யுடன் இணங்க முயற்சிக்க வேண்டும். இதன் மூலம் டெல்லி, பஞ்சாப், குஜராத் ஆகிய மாநிலங்களில் மும்முனைப் போட்டியைத் தவிர்க்கலாம்.

**3.** ம.பி, இராஜஸ்தான், குஜராத், கோவா, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் தேசியவாத காங்கிரஸ் கட்சியுடன் தொகுதி உடன்பாடு செய்து கொள்ள முன்வர வேண்டும்.

**4.** தொகுதி உடன்பாட்டில் நீக்குப் போக்குடன் நடந்து கொண்டு பாஜகவை எதிர்க்கின்ற அனைத்துக் கட்சிகளையும் அரவணைத்துச் செல்ல வேண்டும்.

**5.** காங்கிரஸ் கட்சியின் பிரதம வேட்பாளராக தற்போதைய அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுனே கார்கேயை அறிவிக்க காங்கிரஸ் பரிசீலனை செய்ய வேண்டும். அவர் ஒரு தலித் என்பதால், அம்மக்களை காங்கிரஸின் பக்கம் ஈர்க்க முடியும்.

**6.** கடந்த ஒன்பது ஆண்டுகளாகப் பதவிப் பொறுப்பில் இருக்கின்ற பாஜக ஆட்சியின் மீது மக்களுக்கு இயல்பாகவே ஒரு சலிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இதனைக் காங்கிரஸ் கட்சி பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஐந்து முதல் பத்து விழுக்காடு வாக்காளர்கள் மனம் மாறி காங்கிரஸுக்கு வாக்களித்தாலே அக்கட்சி 250 இடங்களுக்கு மேல் பெற்று விடும்.

### முஸ்லிம் அமைப்புகள் செய்ய வேண்டியவை

உவைஸியின் மஜ்லிஜே இத்திஹாத் முஸ்லிமின் கட்சி தெலுங்கானா தவிர்த்து பீகார், உ.பி, குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளது. காங்கிரஸும் பாஜகவும் ஒன்றுதான் என்பது போல் உவைஸி பேசி வருகிறார். அது சரி அல்ல. இரண்டு கட்சிகளையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கக் கூடாது. கொள்கை அடிப்படையில் காங்கிரஸ் ஒரு மதச் சார்பற்ற கட்சி. பாஜக ஒரு மதவாதக் கட்சி. இந்த இரு கட்சிகளில் முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் எந்தக் கட்சி ஓரளவு பாதகமில்லாத கட்சி என்றுதான் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கின்ற போது காங்கிரஸ் கட்சி பரவாயில்லை என்ற முடிவுக்குத்தான் வர முடியும். வேட்பாளர்களை நிறுத்தி முஸ்லிம்களின் வாக்குகளைப் பிரித்து பாஜகவின் வெற்றிக்குத் துணை போகக் கூடாது. இந்த நிலைப்பாட்டையே எஸ்டிபிஐ போன்ற கட்சிகளும் எடுக்க வேண்டும்.

### கேரளா - மேற்கு வங்காளம்

கேரளாவில் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான எதிர்க்கட்சி காங்கிரஸ்தான். எனவே அங்கு இரு கட்சிகளும் கூட்டணி வைத்துக் கொள்ள முடியாது. எனினும் கேரளாவில் காங்கிரஸ் கூட்டணி - கம்யூனிஸ்ட் கூட்டணிகளில் எந்தக் கூட்டணி வெற்றி பெற்றாலும், அவை பாஜகவுக்கு எதிராகவே இருக்கும். அதனால் பிரச்னை இல்லை. ஆனால் மேற்கு வங்காளத்தைப் பொறுத்த அளவில் அங்கு நிலைமை சற்று சிக்கலாகவே உள்ளது. சென்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது அந்த மாநிலத்தில் காங்கிரஸும் - இடது கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து தேர்தலை சந்தித்தன. இதில் காங்கிரஸ் கட்சி மட்டுமே ஓர் இடத்தில் வெற்றி பெற்றது. ஆனால் யாரும் எதிர்பாராத விதமாக பாஜக 18 இடங்களைக் கைப்பற்றியது. மீதி 23 இடங்களில் திரிணாமுல் காங்கிரஸ் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் அந்த மாநிலத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியுடன் காங்கிரஸும், இடதுசாரிக் கட்சிகளும் கூட்டணி வைக்க முடியுமா என்பது ஒரு சிக்கலான கேள்வியாகவே இருக்கிறது. இதனை எப்படித் தீர்க்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தைக் கண்டு பாஜக பதற்றமடைந்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் வெளியிட்டு வரும் அறிக்கைகளும், ஆற்றுகின்ற உரைகளும் இந்தப் பதற்றத்தின் வெளிப்பாடுகளாகவே அமைந்துள்ளன. எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையைக் குலைக்க ஒன்றிய அரசு தனது புலனாய்வு அமைப்புகளைப் பயன்படுத்தக் கூடும். எனவே எதிர்க்கட்சிகள் எச்சரிக்கையாக இருந்து செயல்பட வேண்டும்.

மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை உருவாக்குவதற்கு காங்கிரஸ் கட்சியே முன்முயற்சிகள் எடுக்க வேண்டும்.

## வாழ்க்கைப் பாடங்கள் 36

# தூக்கம் எனும் அருட்கொடை

**- அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது**

நாம் அன்றாடம் அனுபவித்துக் கொண்டிருக்கிற ஒரு பெரும் அருட்கொடை தூக்கம். இது மனித வாழ்வுக்கு இன்றியமையாதது. உணவைப் போலத் தூக்கமும் மனிதனுக்கு அத்தியாவசியமான தேவையே! இந்த அற்புதமான அருளைப் பற்றி திருக்குர்ஆன் 'மேலும் நாம் உங்களுடைய தூக்கத்தை உங்களுக்கு இளைப்பாறுதலாக, ஓய்வாக ஆக்கினோம்' என்று கூறுகிறது.

உடலியக்கத்தைச் சீராக வைத்துக்கொள்ள தூக்கம் இன்றியமையாதது. தூக்கத்தை இழந்த ஒருவருக்குத்தான் அதன் அருமை, பெருமை புரியும். தூக்கமின்மையால் ஏற்படும் பாதிப்புகள் கொஞ்ச நஞ்சமல்ல. எரிச்சல், மறதி, சோர்வு, பயம், கலக்கம், மனக் குழப்பம், நம்பிக்கையின்மை முதலான பாதிப்புகள் தொடங்கி பயங்கரமான மன நோய்கள், இதயம் சார்ந்த நோய்கள் உட்படப் பல உபாதைகளுக்கும் கூட காரணமாக அமைகின்றது என மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

மறுபக்கம் ஆரோக்கியமான தூக்கத்தினால் விளைகின்ற நன்மைகள் பல இருக்கின்றன. ஹார்மோன்களின் வெளியீட்டை ஒழுங்குபடுத்த, மூளையின் செயல்பாடுகளில் செறிவு, கவனம், உற்பத்தித் திறனை அதிகரிக்க, இதய நோய்கள், பக்கவாதம் போன்றவற்றைத் தவிர்க்க, உடல் எடையை நிர்வகிக்க, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க ஆரோக்கியமான தூக்கம் பேருதவியாக அமைகிறது.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களின் பாதிப்பைக் குறைக்கவும், படபடப்பு, கோபம், கவலை, மனச்சோர்வு, மன அழுத்தம் முதலான உளநோய்களினால் ஏற்படுகின்ற ஆபத்துகளைக் குறைக்கவும் தூக்கம் துணை நிற்கின்றது.

ஆரோக்கியமான தூக்கத்திற்கு உரிய நேரம் இரவு தான். அல்லாஹ் பகலை வேலை செய்வதற்காகவும் வாழ்வாதாரத்தைத் தேடிக் கொள்வதற்காகவும் இரவை தூங்கி ஓய்வெடுத்துக் கொள்வதற்காகவும் அமைத்திருக்கின்றான். இறைவன் திருக்குர்ஆனிலே 'மேலும், அவனே உங்களுக்கு இரவை ஆடையாகவும், உறக்கத்தை அமைதியாகவும் பகலை உயிர்த்தெழும் வேளையாகவும் ஆக்கினான். (திருக்குர்ஆன் 25:47)' என்று குறிப்பிட்டுள்ளான்.

இரவில் மட்டுமே சுரக்கின்ற மெலடோனின் என்கிற ஹார்மோன் இருக்கின்றது. இதுவே ஆரோக்கியமான முழு தூக்கத்திற்குக் காரணமாகும். இந்த மெலடோனின் இரவில் மட்டும்தான் சுரக்கும். இருள், இரவு ஆகியவைதான் இந்த ஹார்மோன் உருவாக்கத்திற்கு மிக முக்கியமானது. இருட்டில் மட்டுமே உற்பத்தி செய்யப்படும் மெலடோனின் ஆழமான தூக்கத்தைத் தருகிறது.

இரவில் கண்விழிப்பதனால் இந்த ஹார்மோன் சுரப்பது தடைப்படுகிறது. இது சுரக்காமல் போனால் உடலின் ஒட்டு மொத்த ஆரோக்கியமும் கெட்டுப்போய், நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து எல்லா நோய்களையும் வரவேற்கின்ற விதமாக உடல் பலவீனம் அடைந்துவிடும். இரவில் ஓய்வு கொள்ள வேண்டிய கல்லீரலும்



பாதிப்படைகின்றது. கண்கள் தொடங்கி சிறு நீரகம் வரை இரவில் தூங்கவில்லையென்றால் கடும் பாதிப்பைச் சந்திக்கும். பகல் தூக்கம் இரவுத் தூக்கத்தை எந்த வகையிலும் ஈடு செய்யாது என மருத்துவர்கள் அழுத்தமாகச் சொல்கின்றார்கள்.

பகலிலே தூங்குவதால் செரிமான பிரச்னைகள், நரம்புத் தளர்ச்சி, தோல் சுருக்கம், மன அழுத்தம் தொடங்கி எதிர்மறையான எண்ணங்கள், ஆண்மைக் குறைவு, கல்லீரல் பிரச்னை எனப் பல நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக மருத்து வர்கள் எச்சரிக்கின்றார்கள்.

மனிதனுக்குத் தூக்கம் ஓர் அடிப்படைத் தேவை, அருள் மட்டுமல்ல ஓர் அமல் (இபாதத்). இந்த வகையிலே தூங்கச் செல்லும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளையும் ஒழுக்கங்களையும் நபி (ஸல்) அவர்கள் விளக்கி இருக்கின்றார்கள்.

படுக்கைக்குச் செல்லும் முன்பு முதலில் உளூச் செய்வது அவசியம். பின் படுக்கை விரிப்பை மூன்று முறை தட்டி சுத்தம் செய்துவிட்டு, சூரத்துல் பகராவின் 285, 286 ஆகிய வசனங்களை ஓதிக் கொள்ள வேண்டும். பின் குல் சூரா மூன்றையும் ஓதி இரண்டு கைகளிலும் ஊதி உடல் முழுவதும் தடவிக்கொண்டு, ஆயத்துல் குர்ஸியையும் ஓதி சுபஹானல்லாஹ் என்று 33 தடவைகளும், அல்ஹம்துலில்லாஹ் என்று 33 தடவைகளும், அல்லாஹு அக்பர் என 34 தடவைகளும் ஓதிக்கொள்ள வேண்டும்.

அதைத் தொடர்ந்து தூங்கும் போது ஓத வேண்டிய துஆக்களை ஓத வேண்டும். குறிப்பாக பின்வரும் துஆவை ஓதுவது வரவேற்கத்தக்கது. ‘என் இறைவனே! உன் பெயரால் எனது உடலைச் சாய்க்கிறேன். (படுக்கிறேன்) உன் பெயரால் தான் அதை உயர்த்துகிறேன் (எழுகிறேன்). என் உயிரை நீ கைப்பற்றிக் கொண்டால் அதற்கு அருள் புரிவாயாக! கைப்பற்றாது அதை நீ விட்டு வைத்தால் உனது நல்லடியார்களைப் பாதுகாப்பது போல் அதையும் பாதுகாப் பாயாக!’ (புகாரி : 6320)

அதைப்போல மற்றொரு துஆ ‘இறைவா! என் முகத்தை உனக்குக் கட்டுப்படச் செய்துவிட் டேன். என் காரியத்தை உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். என் முதுகை உன் பக்கம் சாய்த்து விட்டேன். (உனது தண்டனைக்கு) அஞ்சி விட்டேன். உன்னிடமிருந்து தப்பிக்க, உன்னை விட்டால் வேறு எனக்கு யாரும் இல்லை. இறைவா! நீ அருளிய வேதத்தையும், நீ அனுப் பிய நபியையும் நம்பினேன்’. (புகாரி : 247)

‘இறைவா! உன் பெயரால் நான் மரணிக் கிறேன்; (தூங்குகிறேன்) உன் பெயரால் உயிர் பெறுகிறேன் (ஆதாரம் : புகாரி)’ எனும் சிறிய துஆவையாவது குறைந்தபட்சம் ஓதிக் கொள்ள வேண்டும்.

இந்த ஒழுக்கங்களைப் பேணி தூங்கச் செல்கின்ற போது நம்முடைய தூக்கம் ஓர் இபாதத்தாக மாறும் என்பது மட்டுமல்லாமல் நல்ல சுகமான, நிம்மதியான, ஆரோக் கியமான, ஆழமான தூக்கமும் இன்ஷா அல்லாஹ் கிடைக்கும் என்பது உறுதி.

# இளைஞர்




‘இளைஞர்’ என்பது நன்மையின் மொத்த உருவத்தையோ தீமையின் மொத்த உருவத்தையோ குறிப்பதற்கான பெயரல்ல. மாறாக சூடேற்றப்பட்ட இரத்தத்தின் பெயராகும். புத்தம் புதியவற்றைக் கவர்ந்துகொள்ளும் ஆற்றலின் பெயராகும். ஒரு பொருள் அது முயற்சி செய்து அடைய வேண்டிய ஒன்று என மனத்தில் தோன்றிவிட்டால் – அது நல்லதோ கெட்டதோ உயிரைக் கொடுத்தேனும் அதனை அடைந்துவிட நினைக்கும் ஒரு சக்தியின் பெயர்.

உதாரணமாக வாள் ஒன்றை எடுத்துக் கொள்வோம். இது போர் வீரனுக்கும் பயன்படுகிறது; கொள்ளைக்காரனுக்கும் பயன்படுகிறது. எனவே ‘இளைஞர்’ என்பது ஒரு வலிமையின் பெயராகும். முற்காலத்தில் கூட தீமைகளுக்குத் துணை போவோர் இளைஞர்களாகத் தானிருந்தனர். தீமைகளைப் பெருக்கும் ஓர் இராணுவமாகவும் இவர்கள் செயல்பட்டுள்ளனர். இவர்கள் மூலமே தீமைகள் உலகமெங்கும் பரவலாயின. மேலும் தீமைகளைக் கவர்ந்துகொள்வதில் பெரியவர்களைவிட இவர்களே அதிக ஆர்வத்தைக் காட்டினர். இதே நிலைதான் இன்றும் உள்ளது.

இக்காலத்தில் பரவிவரும் ஒழுக்கக்கேடுகளை மற்றவர்களைவிட வெகு விரைவாக இளைஞர்களே ஏற்றுக் கொள்கின்றனர். இவர்களே அவற்றைப் பரப்புவதிலும் மற்ற அனைவரையும்விட முதன்மை வகிக்கின்றனர். தீமைகள் புரிவோருக்கு மிகுந்த அதிகபட்ச ஊக்கத்தை இவர்களே தருகின்றனர் எனில், இளைஞர்களுக்கு ‘நன்மையே வடிவானவர்கள்’ என்று எவ்வாறு பெயர் சூட்ட முடியும்? இதே போன்று இளைஞர்கள் தீமையே வடிவானவர்களுமல்லர். இது நன்மையானது தான் என ஒன்றைத் தெரிந்துகொண்டு அதில் மனநிறைவு அடைந்து விட்டால் அதற்காக உயிரையும் அர்ப்பணிக்கத் தயங்காத மாபெரும் ஆற்றலும் அவர்களுக்குள்ளேதான் அமைந்துள்ளது.

**– மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி**
**இளைஞனே விழித்தெழு நூலிலிருந்து...**



# இறை அழைப்பை ஏற்றார்

## ஆன்மிக ஞானி மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான்

புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞரும், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் (JIH) மூத்த தலைவருமான மௌலானா முஹம்மத் ஃபாரூக் கான், தனது 91ஆவது வயதில் 2023 ஜூன் 28 அன்று இறைவனிடம் மீண்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். (நாம் இறைவனிடமிருந்தே வந்தோம். அவன் பக்கமே மீளக்கூடியவர்களாய் இருக்கின்றோம்).


மௌலானா ஃபாரூக்கான் திருக்குர்ஆனை மொழிபெயர்ப்பதிலும் விளக்கமளிப்பதிலும் பெற்றிருந்த ஆழ்ந்த ஞானம், நிபுணத்துவத் திற்காக இஸ்லாமியச் சமூகத்தில் மிகவும் மதிக்கப்படும் ஆளுமை யாகத் திகழ்ந்தார். மௌலானா 1932ஆம் ஆண்டு உத்தரப்பிர தேசம் சுல்தான்பூரில் உள்ள கார்பி கிராமத்தில் பிறந்தார். ஹிந்தி இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற மௌலானா ஃபாரூக்கான் ஆசம்கர் பகுதியில் ஆசிரியராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். இஸ்லாத்தின் மீதான ஈர்ப்பின் காரணமாக அவர் இஸ்லாமிய அறிவைப் பற்றிப் படிப்பதற்கும் எழுதுவதற்கும் பரப்புவதற்கும் முன்னுரிமை வழங்கினார்.

மௌலானா அனைவரையும் கவரும் ஆற்றல் கொண்டவர். சிறந்த எழுத்தாளர், சிறந்த சொற்பொழிவாளர். உருது, ஹிந்தி மொழிகளில் கைதேர்ந்தவர். எப்போதுமே தனது ஆக்கங்களைப் படிப்பவர்கள், தன் உரையைக் கேட்பவர்களின் ஆர்வத்தைக் குன்றவிடாமல் பார்த்துக்கொள்ள நற்கருத்துகளையுடைய கதைகள், சம்பவங்களை அடிக்கடி குறிப்பிடும் பாணியைக் கையாள்வார்.

மௌலானா ஃபாரூக்கானின் திருக்குர்ஆன் ஹிந்தி மொழி பெயர்ப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. இதை அவரது வாழ்க்கையின் மைல்கல் என்று சொல்லலாம். இந்த மொழிபெயர்ப்பு திருக்குர்ஆன் அரபு - ஹிந்தி இலக்கியங்களுக்கு இடையேயான இடைவெளியைக் குறைக்கும் வகையில் அமைந்து பரந்துபட்ட பார்வையாளர்களையும் அணுகும்படிச் செய்தது. மௌலானா எடுத்துரைக்கும் குர்ஆனிய போதனைகளின் தெளிவும் துல்லியமும் மகத்தான மரியாதையை ஈட்டித் தந்ததுடன் அத்துறையின் முக்கிய ஆளுமையாக அவரை நிலை நிறுத்தியது.

## மௌலானாவின் நூல்களில் சில...







மௌலானா ஃபாரூக்கான் எழுதியுள்ள கலாமே நுபுவத் எனும் நான்கு தொகுதி களை உடைய ஹதீஸ்களின் தொகுப்பு மிக முக்கியமானது. இது பெரும் வரவேற்பையும் முக்கியத்துவத்தையும் பெற்றதைத் தாண்டி இஸ்லாமிய இலக்கியத்தில் மௌலானாவின் தரத்தை இன்னும் உறுதிப்படுத்தியது. மௌலானாவின் இந்த ஹதீஸ்களுக்கான விளக்கங்கள் இஸ்லாமியர்களுக்கும் உலக மக்கள் அனைவருக்கும் மதிப்புமிக்க வழிகாட் டுதலையும் தெளிவையும் வழங்கியது, வழங்குகிறது, வழங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

மௌலானா ஃபாரூக்கானின் கலாமே நுபுவத் சமரசம் இதழின் நடுப்பக்க நபிமொழியாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இறைவா உன் வாசலில், தொழுகை: இஸ்லாத்தின் முழுமையான வழிபாடு, அன்பு நபியின் அமுத வாக்குகள் ஆகிய மௌலானாவின் நூல்களை தமிழில் மொழிபெயர்த்து இஸ்லாமிய நிறுவனம் அறக்கட்டளை(IFT)வெளியிட்டுள்ளது.

மௌலானா ஃபரூக்கான் இஸ்லாமிய அழைப்புப்பணி, ஆளுமை மேம்பாடு, மதங் களின் ஒப்பீட்டு ஆய்வு (Comparative Study of Religion) உட்பட பல்வேறு பிரிவுகளில் ஏராள மான நூல்களை எழுதியுள்ளார். குர்ஆன் கே தத்ரீசி மஸாயில், குர்ஆன்-இ-மஜீத் கே அதாபி மஹாசின், இல்ம்-இ-ஹதீஸ் ஏக் தாரூஃப், ஹதீஸ் சௌரப், ஹதீஸ் சாஸ்த்ரா ஏக் பரிச்சாய், கலாமே நபுவத், முத்தலா - இ-ஹதீஸ், பர்லோக்வாத் அவ்ர் பாரதிய தரம் கிரந்த், ஆத்மா அவ்ர் பர்மாத்மா, அத்யாத்ம் கா மஹத்வா அவுர் இஸ்லாம், சஃபல்தா அவுர் முக்தி கா ஈக் ஹி ரஸ்தா போன்றவை அவரது பிற குறிப்பிடத்தக்க ஆக்கங்கள். இந்தப் படைப்புகள் இஸ்லாமியச் சிந்தனைகளை இலக்கிய நிலப்பரப்பில் வளப்படுத்தியது மட்டுமின்றி பரந்துபட்ட மக்களுக்கு அதன் செய்திகளை எளிமையான முறையில் சென்றடையவும் உதவியது.

மௌலானா தமது வாழ்வின் பெரும் பகுதியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் தலைமையகத்தில் செலவிட்டார். தம் இறுதிக் காலம் வரை டெல்லி அபுல் ஃபஸல் என்க்ளேவ் வளாகத்தில் அமைந்துள்ள இஷாஅத்தே இஸ்லாம் பள்ளியில் ஐந்து வேளைத் தொழுபவராகவும் ஜமாஅத்தின் தலைமையகத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் விரிவுரையாற்றுபவராகவும் சொற்பொழிவு ஆற்றுபவராகவும் திகழ்ந் துள்ளார். இவர் ஜமாஅத் வட்டாரங்களில் ‘கலந்தர்-மிஜாஜ்’ ஆன்மிக ஞானி எனச் செல்லமாக அழைக்கப்பட்டு வந்தார்.

மௌலானாவின் மறைவு இஸ்லாமிய, இலக்கிய உலகின் ஈடு செய்ய முடியா இழப்பாகும். இஸ்லாத்திற்கான அவரது படைப்புகளும் பங்களிப்புகளும் சமூகத்தில் மிகப்பெரும் தாக்கத்தையும் அழிக்க முடியாத முத்திரையும் பதித்துள்ளது. மௌலானாவின் பணிகளின் தாக்கம் வருங் காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டி ஊக்கமளிக்கும் என்பதில் ஐயமில்லை.

மௌலானா இறை அழைப்பை ஏற்று விடைபெற்றாலும் அவரது படைப்புகளும் எழுத்துகளும் மொழிபெயர்ப்புகளும் கோடான கோடி இஸ்லாமியர்களின் உள்ளங்களில் இறுதிநாள் வரை வாழும் இன்ஷா அல்லாஹ்.

எல்லாம் வல்ல அல்லாஹ் மௌலானா வின் அரும்பணிகளை அங்கீகரித்து சுவனத் தின் உயரிய பதவிகளை வழங்குவானாக! அவரைப் போன்ற ஆளுமைகளை இஸ்லா மிய உலகிற்கு வழங்குவானாக!

# அழகிய படைப்பாளன் அவன்

**அவன்தான் மறைவான மற்றும் வெளிப்படையான அனைத்தையும் நன்கறிந்தவனாகவும், வலிமை மிக்கவனாகவும்,[11] பெரும் கிருபையாளனாகவும்[12] இருக்கின்றான். அவன் படைத்த எந்த ஒரு பொருளையும் அழகாகவே படைத்துள்ளான்.[13] அவன் களிமண்ணிலிருந்து, மனிதனைப் படைக்கத் தொடங்கினான். பின்னர் அவனுடைய சந்ததிகளை அற்பமான நீரைப் போன்ற ஒருவித சத்திலிருந்து படைத்தான்.[14] பிறகு, குறைபாடு இல்லாதவாறு அவனைச் சீரமைத்து[15] அவனுள் தன்னுடைய உயிரை ஊதினான்.[16] மேலும், உங்களுக்குச் செவிகளையும், பார்வைகளையும், இதயங்களையும் கொடுத்தான். நீங்கள் மிகக் குறைவாகவே நன்றி செலுத்துகின்றீர்கள்.**

**● அத்தியாயம் 32 அஸ்ஸஜ்தா ● திருவசனங்கள் : 6-9**

---

**11.** இறைவன் யாவரையும் மிகைத்தவன். சர்வ வல்லமை கொண்டவன். அவனுடைய எண்ணங்களைத் தடுக்கும் வல்லமையோ, அவனுடைய ஆணைகள் நடைமுறைப் படுத்தப்படுவதை முறியடிக்கின்ற சக்தியோ ஒட்டுமொத்த பேரண்டத்தில் எவருக்குமே இல்லை. எல்லாமே அவனுக்கு அடங்கி இருப்பவைதாம். மேலும் எவருக்கும் எதற்கும் இறைவனுக்கு எதிராக மல்லுக்கு நிற்கின்ற தெம்போ திராணியோ இல்லை.

**12.** எல்லாவற்றையும் அடக்கியாளுகின்ற வல்லமையையும் ஆதிக்க சக்தியையும் ஆற்றலையும் கொண்டிருந்தாலும் இறைவன் அக்கிரமக்காரன் அல்லன். அதற்கு மாறாக அவன் தன்னுடைய படைப்புகள் மீது பரிவும் கருணையும் பெருங்கிருபையும் கொண்டவனாக இருக்கின்றான்.

*28 ஆம் பக்கம் பார்க்க...*

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# கேவலமான மனிதர்

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**‘எவருடைய தீமைகளைக் கண்டு மக்கள் அவரைச் சந்திப்பதைக் கூட விட்டுவிடுகின்றார்களோ அவர் மறுமை நாளில் அந்தஸ்தின் அடிப்படையில் மிகக் கேவலமான நிலையில் இருப்பார். இன்னொரு அறிவிப்பில் ‘எவருடைய ஆபாசப் பேச்சிற்கு அஞ்சி அவனை விட்டு வெகுதொலைவில் ஓடிவிடு வார்களோ அவர்’ என்கிற வாசகமும் இடம் பெற்றுள்ளது.’**

*அறிவிப்பாளர் : அன்னை ஆயிஷா(ரலி) நூல் : புகாரி*

இது ஒரு நீண்ட நபிமொழியின் முக்கியமான பகுதி ஆகும். மறுமை நாளில் - மக்களின் விதி பற்றிய இறுதித் தீர்ப்பு வழங்கப்படுகின்ற நாளில் - இறைவனின் ஒட்டுமொத்தப் படைப்புகளுக்கு முன்னாலும் தம்மை மோசமான மனிதன் என்று பொது அறிவிப்பு செய்யப்படுவதை எந்த மனிதர் தான் விரும்புவார்?

மக்களுக்குத் தீங்கிழைப்பதையே பழக்கமாகக் கொண்ட, மக்க ளால் வெறுத்து ஒதுக்கப்படுகின்ற மனிதர்களுக்கும், இந்த ஆளின் சகவாசமும் வேண்டாம் இவன் இழைக்கின்ற தீங்குகளுக்கும் ஆளாக வேண்டாம் என்று மக்கள் வெருண்டோடுகின்ற அளவுக்குத் தீங்கிழைத்து வருகின்ற மனிதர்களுக்கும் இந்த நபிமொழியில் மிகக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதே போன்று எந்த மனிதரின் ஆபாசப் பேச்சு, கீழ்த்தரமான வசைகள் நிறைந்த உரையாடலுக்கும் அஞ்சி மக்கள் விலகிச் செல் கின்றார்களோ அது போன்ற மனிதர்களுக்கும் இந்த நபிமொழியில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

**13.** இந்தப் பரந்து விரிந்த மிகப் பெரும் பேரண்டத்தில் எண்ணற்ற பொருள்களும் படைப்புகளும் காணப்படுகின்றன. ஆனால் அவற்றில் யாதொன்றிலும் எந்தவொரு குறையோ, பழுதோ, கோணலோ, பிழையோ அறவே இல்லை. ஒவ்வொன்றும் தமக்கெனத் தனி அழகைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் தமக்கு மட்டுமே உரித்தான சரியான விகிதத்தையும் பொருத்தத்தையும் இணக்கத்தையும் கொண்டிருக்கின்றன. எந்தப் பொருள் எந்தப் பணிக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றதோ, அது அந்தப் பணியைச் செய்வதற்கேற்ற பொருத்தமான வடிவமைப்போடும் அவசியமான கச்சிதமான பண்புகளோடும் படைக்கப்பட்டிருக்கின்றது.

பார்ப்பதற்கான கண்களின் வடிவமைப்பைக் காட்டிலும் கேட்பதற்கான காதுகளின் வடிவமைப்பைக் காட்டிலும் பொருத்தமான, சிறப்பான வடிவமைப்பை எவராலும் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. காற்றும், நீரும் எந்த நோக்கங்களுக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றனவோ முழுக்க முழுக்க அவற்றுக்கு இயைந்து போகின்ற வடிவத்தைத்தான் காற்றும் கொண்டிருக்கின்றது. நீரும் ஏற்றிருக்கின்றது. இறைவன் வடிவமைத்து படைத்த எண்ணற்ற படைப்புகளில் எந்தவொரு படைப்பிலும் இம்மியளவு கோளாறையோ, பழுதையோ உங்களால் அடையாளம் காட்டவே முடியாது.

**14.** முதலில் அவன் நேரடியாக தன்னுடைய படைப்பூக்கச் செயல் (Direct Creation) மூலம் மனிதனைப் படைத்தான். மேலும் அதே மனிதனுக்குள் அவனுடைய விந்தணுவிலிருந்து மேன்மேலும் மனிதர்கள் பிறந்துகொண்டே இருக்குமாறு மனித இனம் தலைமுறை தலைமுறையாய்த் தொடர்கின்ற அளவுக்கு இனப்பெருக்க ஆற்றலையும் பதித்து விட்டான். மண்ணுக்குரிய பொருள்களை ஒன்று சேர்த்து ஒரு படைப்பூக்க ஆணையைக் கொண்டு அதில் உயிர்த்துடிப்புமிக்க வாழ்வையும் உணர்வையும் அறிவுத்திறனையும் படைத்து விட்டதும் அவற்றிலிருந்து மனிதனைப் போன்ற வியத்தகு படைப்பு உருவாகிவிட்டது ஒரு அற்புதமே.

இரண்டாவது அற்புதம் என்னவெனில் அடுத்து மேன்மேலும் மனிதர்கள் பிறப்பதற்காக மனிதனின் உடலமைப்பிலேயே எந்த அளவுக்கு வியத்தகு, ஆற்றல்மிகு உயிர்த்துடிப்புள்ள ஏற்பாட்டையும் இயந்திரங்களாக இயங்குகின்ற உறுப்புகளையும் வைத்துவிட்டான் எனில் அவற்றின் வடிவமைப்பையும் செயல்திறனையும் பார்க்கின்ற எவரும் மலைத்து, திகைத்து, வாயடைத்து நின்றுவிடுகின்றார்கள்.

முதல் மனிதனை இறைவன் எவ்வாறு நேரடியாகப் படைத்தான் என்பதை விவரிக்கின்ற வசனங்களில் இதுவும் ஒன்றாகும். இறைவனே மனிதனை நேரடியாகப் படைத்தான் என்கிற இந்த யதார்த்தத்தை டார்வின் காலத்திலிருந்து விஞ்ஞானிகள் பலரும் ஏற்றுக்கொள்ள மறுத்து முகம் சுளித்து வந்துள்ளார்கள். மிகவும் எளக்காரமாக இது அறிவியலுக்கு நேர்மாற்றமான கருத்தோட்டம் என்று அறிவித்து இதனை தூக்கி வீசிவிடுகின்றார்கள்.

அதே சமயம் மனிதன் படைக்கப்பட்டதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், ஒட்டுமொத்த மனிதர்கள் படைக்கப்படுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், முதல் நுண்ணுயிரி நேரடியாகப் படைக்கப்பட்ட கோட்பாட்டை அவர்களால் மறுக்கவே முடியாது. அது படைக்கப்பட்டதை மறுத்தால் வாழ்வின் தொடக்கம் தற்செயலாக நடந்த ஒரு விபத்துதான் என்கிற வடிகட்டிய முட்டாள்தனமான கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதிருக்கும். இத்தனைக்கும் ஒரே செல்லைக் (Cell) கொண்ட நுண்ணுயிரியின் எளிமையான வாழ்க்கை வடிவமும் எத்துணை சிக்கலான, நுட்பங்களைக் கொண்டு பின்னிப் பிணைந்ததாக இருக்கின்றது எனில் அதனை ஒரு விபத்திலிருந்து உருவானது எனச்

சொல்வது அறிவியலுக்கு அப்பாற்பட்ட பேச்சு ஆகும்.

பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை ஆதரிக்கின்றவர்கள் எந்த அளவுக்கு படைப்புக் கோட்பாட்டை அறிவியலுக்கு அப்பாற்பட்ட பேச்சு என அறிவிக்கின் றார்களோ அதனை விட இலட்சம் மடங்கு அறிவியலுக்கு அப்பாற்பட்ட பேச்சு தான் அது. வாழ்வின் தொடக்கமாக முதல் நுண்ணு யிரி நேரடியாகப் படைக்கப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்கள் எனில், உயிரினங்கள் அனைத்துமே முதன் முதலாக படைப்பாளன் ஒருவனின் படைப்பூக்கச் செயலால் பிறந் தன என்பதையும் மேலும் அவற்றின் இனப்பெருக்கம் (Procreation) வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து நிகழ்ந்து கொண் டிருக்கின்றது என்பதையும் ஏற்றுக் கொள் வதற்கு என்ன தயக்கம்? இதனை ஏற்றுக் கொள்வார்களேயானால், டார்வினைத் தூக்கிப் பிடிப்பவர்கள் பாடுகின்ற அறிவியல் காவியங்களையும் மீறி அவர்களின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டால் தீர்க்கப்படாமல் கிடக்கின்ற எத்தனையோ முடிச்சுகளை யும் விடை காணா வினாக்களையும் அது தீர்த்துவிடும். (கூடுதல் விளக்கங்களுக்குப் பார்க்க: தஃப்ஹீமுல் குர்ஆன் 4:1; 7:10, 146; 15:17)

**15.** மிக மிக ஆற்றல் வாய்ந்த நுண் ணோக்கியைக் கொண்டும் பார்க்க இயலாத நிலையிலிருந்து வளர்த்து முழுமையான உடலமைப்பைக் கொண்ட மனிதனாக்கினான். மேலும் அவனுடைய உடலின் அனைத்து உறுப்புகளையும் சீராகவும் நிறைவாகவும் முழுமைப்படுத்தினான்.

**16.** ரூஹ் என்பது உயிர் - இது மனித உடலை இயங்கச் செய்கின்ற உயிரை மட்டும் குறிக்காது. அதோடு சிந்தனை, விழிப்பு உணர்வு, அறிவு, நன்மையையும் தீமையையும் பிரித்தறிகின்ற திறன், பகுத் தறிவு, தீர்மானிக்கின்ற ஆற்றல் ஆகிய வற்றை உள்ளடக்கிய தனிச்சிறப்புமிக்க அடிப்படையான உயிரோட்டமான மொத்த வடிவம்தான் ரூஹ். அது இருப்பதால் தான் மனிதன் இந்தப் பேரண்டத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த படைப்புகளைக் காட்டிலும் தனிச்சிறப்பு நிறைந்த படைப்பாக, சுய அதிகாரத்தையும், முனைப்பையும் கொண்ட படைப்பாக, கிலாஃபத் என்கிற பொறுப்பைக் கொண்ட படைப்பாக இருக்கின்றான்.

இந்த ரூஹை அல்லாஹ் தன்னுடைய ரூஹாகக் குறிப்பிட்டிருப்பதற்கு இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். ஒன்று, இது அல்லாஹ்வின் சொத்து. மேலும், ஒரு பொருளை அதனுடைய உரிமையாளர்மீது சாற்றிவிட்டு அவனுடைய பொருள் என்று சொல்லப்படுவதைப் போன்றுதான் இங்கு இந்த ரூஹை அல்லாஹ் தன்னுடைய ரூஹாகக் குறிப்பிட்டிருக்கின்றான். அல்லது சிந்தனைத்திறன், விழிப்பு உணர்வு, எண்ணம், தீர்மானம், அதிகாரம், முடிவெடுக்கும் ஆற்றல், அறிவு என மனிதனிடம் இருக்கின்ற பண்புகள் அனைத்துமே இறைவனின் பண்புகளின் பிரதிபலிப்பாகத்தாம் இருக் கின்றன.

இந்தப் பண்புகள், ஆற்றல்கள் அனைத் துக்கும் மூலாதாரமாக, மூலப் பொருளாக இருப்பது இறைவன்தானே தவிர வேறு எதுவுமே அல்ல. அல்லாஹ்வின் அறிவி லிருந்துதான் அவனுக்கு அறிவு கிடைத் திருக்கின்றது. அல்லாஹ்வின் ஞானத்தி லிருந்துதான் அவனுக்கு ஞானம் கிடைத் துள்ளது. அல்லாஹ்வின் அதிகாரத்திலிருந்து தான் அவனுக்கு அதிகாரம் கிடைத்திருக் கின்றது. இந்தப் பண்புகள் அனைத்துமே அறிவு இல்லாத, பகுத்தறியும் திறன் இல்லாத, அதிகாரம் இல்லாத, உணர்வு இல்லாத மூலப் பொருள்களிலிருந்து மனிதனுக்குள் வந்திருக்கவில்லை. இந்தப் பொருளில்தான் அல்லாஹ் இந்த ரூஹை தன்னுடைய ரூஹாகக் குறிப்பிடுகின்றான். (கூடுதல் விளக் கங்களுக்காக பார்க்க: தஃப்ஹீமுல் குர்ஆன் 15:19)

(தொடரும்)

# RDB EDUCATIONAL INSTITUTIONS

RDB
Educational & Charitable Trust

No.4, Saliyamangalam Road, Papanasam - 614 205, Thanjavur Dt.
www.rdbtrust.org

23 Years of Academic Excellence

# ADMISSIONS OPEN

Dr. M.A. Dawood Batcha
Founder & Chairman



## RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2(f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

### UG COURSES

- B.Lit. Tamil
- B.A. English
- B.B.A.
- B.Com.
- B.Com (CA).
- B.Sc. Computer Science
- B.Sc. Information Technology
- B.C.A.
- B.Sc. Mathematics
- B.Sc. Physics
- B.Sc. Biotechnology
- B.Sc. Biochemistry
- B.Sc. Microbiology
- B.Sc. Visual Communication
- B.Sc. Hotel Management & Catering Science
- B.Sc. Fashion Technology & Design *
- B.Sc. Nutrition and Dietetics *
- B.Sc. Psychology *
- B.A. Islamic studies *

### PG COURSES

- M.Com.
- M.Sc. Computer Science
- M.Sc. Information Technology

### RESEARCH COURSE

- M.Phil. Commerce
- M.Phil. Computer Science
- Ph.D. Commerce

* Subject to Affiliation

## RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No : 5353A.1/2.20)

### LKG to XII Std

+1 COURSES OFFERED

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

## RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with 'B" Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

## RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (HOSPITAL ADMINISTRATION)

### RESEARCH COURSE

- M.Phil., Management
- Ph.D., Management

## RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM) (2 Year Diploma Programme)

## RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

OPENING SOON

63809 80363 / 04374-222123

admissions@rdbcas.edu.in

# அமெரிக்காவில் நரேந்திர மோடி:
## கட்டமைக்கப்பட்ட பிம்பங்களும் உண்மைகளும்

அமெரிக்காவிலிருந்து **அரவிந்தன் கண்ணையன்**

***2023** ஜூன் 21-23ஆம் நாள் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அரசு முறைப் பயணமாக அமெரிக்காவுக்கு வருகை புரிந்தார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்திய பிரதமருக்குக் கோலாகல வரவேற்பளித்தார். இத்தகைய வரவேற்பு அமெரிக்கா வாழ் இந்தியர்களிடையே கணிசமாக இருக்கும் பாஜக ஆதரவாளர்களுக்கு மட்டு மல்ல சராசரி இந்திய - அமெரிக்கர்களிடையேயும் மிகுந்த வியப்பளித்தது உண்மை.*

*இந்திய ஊடகங்கள் இந்த வரவேற்பை மோடியின் இந்தியாவுக்கு சர்வதேச அரங் கில் இருக்கும் மரியாதை என்றதோடு இவ்வரவேற்பு புதிய இந்தியாவைப் பறை சாற்றுவதாகவும் முந்தைய, குறிப்பாக காங்கிரஸ் பிரதமர்களால் சாதிக்க இயலாதது போன்ற பிம்பத்தைக் கட்டமைத்தன. மோடியின் அமெரிக்க வருகை உண்மையில் சாதித்ததென்ன? ஊடகப் பரப்புரையில் என்னென்ன மிகைப்படுத்தல்கள் இருந்தன என்பதை விளக்குகிறது இக்கட்டுரை.*

### ஜவஹர்லால் நேருவும் இந்திய - அமெரிக்க உறவும்

1949 அக்டோபர் 11இல் மூன்று வார அரசு முறை சுற்றுப் பயணமாக ஜவஹர்லால் நேரு அமெரிக்காவுக்கு அன்றைய ஜனாதிபதி ஹேரி டிரூமனின் அழைப்பின் பேரில் சென்றார். நேரு அமெரிக்கா வருவதற்கு ஒருநாள் முன் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை ‘மேற்குலகத் தலைவர்கள் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத பிரபலத்தை மக்களிடையே சம்பாதித்தவர் நேரு, வழக்கமான தயார் செய்யப்பட்ட உரைகளைப் பேசாது மிகத் திறம் படப் பேசக் கூடியவர் அவர், தீவிர கொள்கைகள் உடையவர், பண்பாட்டுப் புரிதல் உடையவர், வெளிப்படையாகப் பேசுபவர், நயமுடைவர்’ என்று எழுதியது.



அப்போது லண்டனில் இருந்து நேருவை அழைத்து வர டிரூமன் தன் பிரத்தியேக விமானத்தை அனுப்பியதோடு நேருவை விமான நிலையத்துக்கே சென்று வரவேற்றார்.

1949இல் இந்தியா ஒரு குடியரசு கூடக் கிடையாது, மிக ஏழ்மையான நாடு, பிரிவினையால் மிகுந்த குருதி சிந்திய நாடு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அப்போது யாரும் இந்தியாவில் நீங்கள் சிறுபான்மையினரை நல்லவிதமாக நடத்து வீர்களா என்று கேள்வி எழுப்பவில்லை. ஏனென்றால் நேருவின் மீது உலகம் நம்பிக்கை கொண்டிருந்தது. நேரு சென்ற இடமெல்லாம் அமெரிக்கர்கள் ஆயிரக் கணக்கில் குழுமினர். தெருவெங்கும் நேருவுக்கு வரவேற்பு கரை புரண்டோடியது, பெரும் விளையாட்டரங்கம் நிரம்பி வழிந்தது, அறிஞர்களை நேரு சந்தித் தார், நேருவை அறிஞர்களும் நாடினர், அமெரிக்கப் பத்திரி கைகளுக்கு நேரு பல பேட்டிகள் அளித்தார். அந்த முதல் வருகை யின் போதே நேரு அமெரிக்கக் காங்கிரஸில் உரையாற்றினார்.

நேருவின் அடுத்த அமெரிக்கப் பயணம் 1956 டிசம்பர் 16இல் ஐசன்ஹோவர் ஜனாதிபதியாக இருந்த போது நிகழ்ந்தது. ஐசன்ஹோவர் நேருவின் மீது பெருமதிப்புக் கொண்டிருந்தவர்.

நேருவின் 1949 வருகையின் போது ஐசன்ஹோவர் உலகப் புகழ்பெற்ற



கொலம்பியா பல்கலைக்கழகத்தின் தலைவர். அப்போது நேருவை பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பிரதம உரையாற்ற அழைத்து, கௌரவ முனைவர் பட்டமும் அளித்துச் சிறப்பித்தார். 1956 டிசம்பர் 16, வாஷிங்டன் வந்தடைந்த நேருவை கெட்டிஸ்பர்க் நகரிலுள்ள தன் பண்ணை வீட்டுக்கு தன்னுடனே அழைத்துச் சென்றார் ஐசன் ஹோவர். ஐசன்ஹோவரின் பண்ணை வீட்டுக்கு அழைத்துச் செல்லப் பட்ட முதல் வெளிநாட்டுப் பிரமுகர் நேரு.

அந்தப் பயணத்திலும் பின்னர் வீட்டிலும் கிட்டத்தட்ட 14 மணி நேரம் ஐசன்ஹோவரும் நேருவும் உரையாடினர். தங்கள் உரையாடலைப் பற்றி ஐசன்ஹோவர் 14 பக்கங்கள் குறிப்புகள் எழுதினாராம். நேருவின் அமெரிக்க வருகையிலேயே இந்த வருகை மிக மிகப் பலனளித்த ஒன்று. அமெரிக்கா இந்தியாவுக்கு அளித்த பொருளாதார உதவி இரண்டு மடங்கானது. இந்திய - அமெரிக்க உறவை மேலும் பலப்படுத்த இந்தியாவுக்கு ஐசன்ஹோவர் வந்தார். இந்தியா வந்த முதல் அமெரிக்க ஜனாதிபதி அவர்.



## இந்திரா காந்தியும் இந்திய - அமெரிக்க உறவும்

லிண்டன் ஜான்சன், ரிச்சர்ட் நிக்ஸன், ரோனல்ட் ரீகன் என்று மூன்று அமெரிக்க ஜனாதிபதிகளோடு இந்திய - அமெரிக்க உறவைக் கட்டமைத்தார் இந்திரா காந்தி. ஜான்சனும் நிக்ஸனும் இந்திராவோடு மோதியதோடு இந்தியாவுக்கு அளித்த உணவு உதவிகளுக்குக் கட்டுப்பாடுகள் விதித்தனர். உணவு சார்ந்து அமெரிக்காவுக்குக் கீழ்ப்படிய மறுத்த இந்திரா இந்தியாவை உணவில் தற்சாற்புடைய நாடாக மாற்ற உறுதி பூண்டு பெரு வெற்றியும் கண்டார்.



ரீகன் முந்தய ஜனாதிபதிகளை விட நட்புடன் இந்திராவை அணுகினார். அதே நட்பினை ரீகன் ராஜீவிடமும் காண்பித்ததைக் காணொளிகளில் காணலாம்.

## மன்மோகன் சிங்கும் இந்திய - அமெரிக்க உறவும்

இந்திய - அமெரிக்க உறவில் மைல்கல் என்று சொல்லத்தக்க உறவு இரண்டாம் ஜார்ஜ் புஷ் - மன்மோகன் சிங் காலத்தைத் தான் சொல்ல முடியும். 2005இல் மன்மோகன் சிங்கை ஜார்ஜ் புஷ் வரவேற்று விருந்தளித்தார். பின்னர் 2006இல் ஜார்ஜ் புஷ் இந்தியா வந்தார். மன்மோகன் சிங் அமெரிக்கா வந்த போது அவரும் புஷ்ஷும் சேர்ந்து அமெரிக்கா இந்தியாவின் ஆயுதம் சாரா அணுசக்திக்குத் தேவையான, அதுவரை தடை செய்யப்பட்டிருந்த, எரிபொருள் முதலானவற்றை ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது.

பின்னர் 2006இல் இந்தியாவுக்கு புஷ் பயணமான போது விமானத்தில் இருந்த படியே ஒப்பந்தத்தை மன்மோகன் சிங்கோடு நேரடியாகப் பேசி இறுதி செய்து அதனை டில்லியில் இறங்கியதும் அறிவித்தார். இந்த இந்திய - அமெரிக்க ஒப்பந்தத்தைக் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து அப்போதைய பாஜக எதிர்த்தது வரலாறு.

இந்த ஒப்பந்தத்தின் மிக முக்கியமான அம்சம் அதுவரை பல்லாண்டுகளாக இந்தியாவுடனான எந்த ஒப்பந்தத்தையும் பாகிஸ்தானின் மனம் நோகாமல் தான் அமெரிக்கா செய்து வந்தது. ஆனால் முதன் முறையாக இந்தியாவை பாகிஸ்தானோடு சேர்ந்து



பார்ப்பதை தவிர்த்துத் தங்கள் சர்வதேச தந்திரோபாயங்களுக்காக அமெரிக்கா இந்தியாவைத் தனித்துப் பார்த்து ஒப் பந்தம் செய்தது. ஒபாமா பதவிக்கு வந்ததும் முதல் அரசு விருந்தை மன் மோகன் சிங்கை அழைத்து அளித்தார். மன்மோகன் சிங்கின் மீது புஷ்ஷும் ஒபா மாவும் பெருமதிப்புக் கொண்டிருந்தனர்.

சுருக்கமாகச் சொன்னால் 60 ஆண்டுகள் இந்திய - அமெரிக்க உற வில் சில தொடக்கமான விஷயங்கள் உள்ளன. ஆசிய கண்டத்தில் இந்தியா முக்கியமான பங்களிக்கும் நாடாகவே பார்க்கப்பட்டதோடு இந்தியத் தலை வர்கள் தனி மதிப்பையும் பெற்றிருந் தனர். மாறிவரும் சர்வதேச சதுரங்க ஆட் டத்தினாலும் வர்த்தக நோக்குகளினாலும் இந்தியாவின் முக்கியத்துவம் கடந்த 20, 25 ஆண்டுகளாகவே ஏறுமுகம் கண்டிருக்கிறது. ஜிம்மி கார்டருக்குப் பின் இந்தியா வந்த முதல் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன். அதுவும் தன் பதவிக் காலத்தில் இறுதி ஆண்டில் வெறும் ஊர் சுற்றிப் பார்க்கவே பிரதான மாக வந்தார்.

அடுத்தடுத்து நிகழ்ந்த சர்வதேச மாற்றங்களும் இந்தியாவுக்கு மன்மோகன் சிங் போன்ற ஒருவர் பிரத மராக இருந்ததும் இந்திய - அமெரிக்க



உறவை அமெரிக்க ஜனாதிபதிகளின் முக்கியத்துவ வரிசையில் முன் நகர்த்தியது. இந்தியப் பிரதமர்கள் அமெரிக்காவுக்கு அரசு விருந்தினராகத் தடபுடலாக அழைக்கப்படுவது மோடிக்கு முன்பே தொடங்கிய ஒன்று தான்.

### அமெரிக்கக் காங்கிரஸில் மோடியின் உரை: பருந்தாக முயன்ற ஊர்க் குருவி

பிரதமர் மோடியின் உரையில் இந்தியாவின் சாதனைகளைக் குறிப்பிட்டார். இந்தியா இன்று பெரும் பொருளாதாரச் சந்தை. எனவே அவர் பட்டியலிட்ட சாதனைகள் பல முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்க்கும். அவ்வகையில் அது நல்லதொரு பட்டியல். இந்தியா, அமெரிக்கா இரண்டுமே ஜனநாயக நாடுகள் எனினும் இன்று இவ்விரண்டிலும் ஜனநாயகம் ஊசலாடுகிறது. ஓர் அமெரிக்க ஜனாதி பதியே தேர்தல் தோல்வியைப் புரட்டிப் போட ஒரு கலவரத்தை ஏவியது அமெரிக்க வரலாற்றின் கருப்பு நாள், அந்த அபாயம் இன்றும் அமெரிக்காவின் தலை மீது கத்தியாகத் தொங்குகிறது.

இந்தியாவோ தேர்தல் அளவில் மட்டுமே இன்று பிரதானமாக ஜனநாயக நாடு. நாடாளுமன்றம் பிரதமரின் ரசிகர் மன்றம். ஜனநாயகம் மரபணுவில் இருக்கிறது என்று பிரதமர் பேசியது நல்ல நகைச்சுவை. இன்று எல்லா தலைவர்களின் இம்மாதிரி உரைகள் உரை எழுத்தாளர்களைக் கொண்டு எழுதப்படுவதே. ஆனால் அதற்கென்று சில நியாயங்கள் உள்ளன. பேச்சாளரின் பொதுவான உரை வடிவங்கள், சொற் பிரயோகங்கள், சித்தாந்த சாய்வுகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்து பேசுபவரின் இயல்புக்கு ஏற்றவாறு தான் எழுதுவார்கள், எழுத வேண்டும். தலைவர்களும் எழுதிக் கொடுத்ததை ஒப்பிக்காமல் அதன் மீது சில மாற்றங்களையாவது சுயமாகச் செய்வார்கள்.

மோடியின் உரையில் இருந்த சில வாக்கியங்கள் அப்பட்டமான ஹாஸ்யம். ஆப்ரஹாம் லிங்கனை பிரதியெடுத்து Standing here, seven Junes ago, that's the June when Hamilton swept all the awards, I said என்றார் மோடி. மோடிக்கு லிங்கனின் மொழி கிடையாது என்பது குறைபாடல்ல. ஆனால் அதை செயற்கையாகப் பாவிப்பது கேலிக்கூத்து. அதுவும் ஹேமில்டன் நாடகமெல்லாம் அவருக்குச் சுத்தமாகத் தெரியாது என்பது கேட்போர் யாருக்கும் தெரியும்.

ஹேமில்டன் நாடகம் தெரியாதது குறையே அல்ல. ஆனால் ஒரு பிரதமர் அது தெரிந்தது போல் காட்டிக் கொள்வதெல்லாம் வெட்கக் கேடு.

அப்புறம் ஜான் லூயிஸ் இறந்த போது ஓர் இரங்கல் ட்வீட் மட்டும் சொன்னவர் இன்று என்னமோ காலகாலமாக ஜான் லூயிஸையும் அவர் போராட்டத்தையும் அறிந்தது போல் பாவ்லா காட்டியதை என்னவென்று சொல்ல? சரி அதையெல்லாம் செய்தவர் அமெரிக்கக் காங்கிரஸில் கருப்பினத்தவருக்கென்று ஒரு குழுமம் இருக்கிறதென்பதை அறிவாரா, அவர்களைச் சந்தித்தாரா? காந்தியின் வழியில் கருப்பினத்தவரோடு நேருவும் நட்புறவில் இருந்தார். நேருவை ஆங்கிலேய அரசு சிறையில் வைத்த போது அதைக் கண்டித்து லாங்க்ஸ்டன் ஹ்யூஸ் கவிதை எழுதி அதனை அமெரிக்காவில் தங்கள் நிலையுடன் ஒப்பிட்டார்.

மோடி நேரு போல் பேச முயன்ற இடமெல்லாம் தோற்றுத் தான் போனார். கான மயிலாட கண்டிருந்த வான்கோழி நிலை தான். உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகாது.

## மோடியின் சுயம் வெளிப்பட்ட இடங்கள்

1. இந்தியா 1000 ஆண்டு காலம் அடிமைப் பட்டிருந்தது என்று மொகலாய சாம்ராஜ்ய காலத்தை எல்லாம் வெளிநாட்டு ஆதிக்கத்தோடு சேர்த்து பேசியது vintage Modi. 2.இந்தியா என்றதுமே வேத காலத்தோடு மட்டுமே தொடர்புபடுத்திப் பேசுவது தற்செயலோ பண்டைய மரபு ஒன்றின் நினைவு கூரலோ மட்டுமல்ல. இந்தியா என்பது மோடியின் மனதில் என்றும் இந்துஸ்தானம் தான். 3. அமெரிக்கா மீதான 9/11 தாக்குதலையும் இந்தியா மீதான நவம்பர் தாக்குதலையும் சம்பந்தப்படுத்தி தீவிர வாதம் பற்றிய குறிப்பு.

உடனே பலர், மோடி எதிர்ப்பாளர்கள் உட்பட, அது நிஜம் தானே எனக் கேட்கலாம். அவ்விரு நிகழ்விலும் அந்தந்த நாட்டின் இஸ்லாமியருக்கு எந்தப் பங்குமில்லை. அவை கடல் கடந்த பல காரணங்களை உள்ளடக்கிய மதத்தைப் போர்வையாகக் கொண்ட தீவிரவாதம். அது உலகளாவிய பிரச்னையல்லவா என்றால் ஆமாம் பிரச்னை தான். சரி அதனைப் பேசியவர் இன்று அமெரிக்கா இந்தியாவை நெருங்குவதற்கான உண்மையான காரணமான சீன அச்சுறுத்தல் பற்றியும் சொல்லி இருக்கலாமே? இன்று



இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல் சீனா தான், அதுதான் இன்றைய நிகழ்வுகளுக்கான நிர்பந்தம்.

## பலனடைந்தது யார்?

மோடியின் வருகை அமெரிக்க பத்திரிகைகளில் விவரமாகவே முதல் பக்கங்களில் இடம் பிடித்தது. இந்த ஊடக வெளிச்சத்துக்குப் பல காரணங்களுண்டு. அமெரிக்கா இன்று சீனாவை, ருஷ்யாவை விட, முக்கியமான எதிர் சக்தியாகப் பார்க்கிறது. சீன அச்சுறுத்தலை எதிர்கொள்ள இந்தியாவை முக்கியமான நட்புச் சக்தியாகக் கொண்டு ஒரு தரப்பை அமெரிக்கா கட்டமைக்கிறது. இந்திய சந்தையை அமெரிக்கப் பெரு நிறுவனங்கள் தங்கள் உலக வர்த்தகத்தின் ஓர் அங்கமாகப் பார்க்கின்றன. செல்வச் செழிப்புள்ள பல்லாயிரக்கணக்கான இந்திய - அமெரிக்க பிரஜைகள், அமெரிக்க அரசியலில் இந்தியர்களின் பங்கு அதிகரித்திருப்பது, ஊடகங்கள் இணையத்தில் எளிதாகச் செய்தி வெளியிடும் தன்மை, மோடியின் மீது இருக்கும் வியப்பு - ஒரு பக்கம் அவரை ஆராதிக்கும் இந்தியர்கள், மறுபுறம் அவர் கட்சியினர் முன்னெடுக்கும் மக்களைப் பிளக்கும் அரசியலும் அதற்காக அவரை வெறுப்போரும் கணிசமாக இருக்கும் விநோதம் - எல்லாம் காரணங்கள்.

மோடியின் இப்பயணத்தின் முதன்மை பலனாளிகள் அமெரிக்க இராணுவத் தளவாட விற்பனையாளர்கள் என்றால் மிகையாகாது.

அடுத்தது அமெரிக்கக் கம்பெனிகள். பல பில்லியன் டாலர் மதிப்புள்ள இராணுவ உப யோகத்துக்கான கருவிகள் விற்பனைக்கு கையெழுத்திடப்பட்டுள்ளது. அமெரிக்கக் கம்பெனிகள் இந்தியாவில் உற்பத்தி செய்ய வும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியது இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கும்.

### அமெரிக்க பத்திரிகையாளரை எதிர்த்த சங் பரிவாரம்

மோடிக்கு ஜோ பைடன் தடபுடலான வரவேற்பு அளிப்பது அமெரிக்காவில் விமர்சனத்தையும் உண்டாக்கியது. மோடி அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து அமெரிக்க பத்திரிகைகளில் கவனப்படுத் தப்பட்டு வந்திருக்கின்றன. அமெரிக்க அரசின் வருடாந்திர உலக நாடுகளில் மதச் சுதந்திரத்தின் நிலை பற்றிய அறிக்கைகளில் இந்தியா பற்றி தொடர்ந்து விமர்சனங்கள் காணப்படுவது இந்திய அரசை எரிச்சல் படுத்தி இருப்பதைக் கடந்த கால அறிக்கைப் போர்களில் காணலாம்.

அமெரிக்காவின் பிரதான சர்வதேச உறவுகள் பற்றிய பத்திரிகை (Foreign Affairs) இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பொது விழுமியங்கள் என்று சொல்வதை விட பொதுத் தேவைகள் இருக்கின்றன என்பதே சரி என்று இடித்துரைத்துக் கட்டுரை எழுதியது. அக்கட்டுரையில் மோடி அரசின் சிறுபான்மை விரோதப் போக்கி னைச் சுட்டிக் காட்டினார் கட்டுரையாளர். பைடன் மோடியைச் சந்திக்கும் போது மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்காவின் கருத்தை தெரிவிப்பாரா என்று செய்தி யாளர்கள் வினவினார்கள்.

மோடியும் பைடனும் பத்திரிகையாளர் களைச் சந்தித்த போது வால் ஸ்டிரீட் ஜர்னல் பத்திரிகையைச் சேர்ந்த சப்ரீனா சித்திக்கி மோடியிடம் இந்தியாவில் சிறுபான்மையினர் நடத்தப்படும் விதம் குறித்து கேள்வி எழுப் பினார். முன்பொரு முறை குஜராத் கலவரம் பற்றிக் கரண் தாப்பர் கேள்வி கேட்ட போது எப்படி ஒரு மிடறு தண்ணீர் குடித்தாரோ அதே போல் இப்போதும் ஒரு மிடறு தண்ணீர் குடித்துப் பின் பொத்தாம் பொதுவாக இந்தியா ஜனநாயக நாடு என்றெல்லாம் கேள்விக்குச் சம்பந்தமே இல்லாமல் பதில் சொன்னார் மோடி. விஷயத்தை அத்தோடு முடிந்திருக்கலாம்.

ஆனால் மோடி ஆதரவாளர்களுக்கு ஓர் இஸ்லாமியப் பெண் இப்படி ஒரு கேள்வி கேட்டதே கோபத்தின் உச்சிக்கு அவர்களைக் கொண்டு சென்றது. அடுத்த சில நாள்கள் அப் பெண் நிருபர் இணையத்தில் பெரும் தாக் குதலை எதிர்கொண்டார். எதிர்ப்புகள் எல்லாம் நிருபரின் மதத்தைக் குறிவைத்தன. விஷயம் தீவிரமடைந்து அமெரிக்க வெள்ளை மாளிகை அதிகாரப்பூர்வமாகக் கண்டனம் தெரிவிக்கும் அவலச் சூழலுக்கு இட்டுச் சென்றது.

### ஒபாமாவின் விமர்சனம்

இதற்கிடையே முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சி.என்.என்னுக்கு அளித்த பேட்டி ஒன்றில், மோடியின் வருகை யின் போதே, இந்தியாவில் மக்களிடையே நல்லிணக்கம் நிலவ வேண்டுமென்றுமென்றும் அப்படி இல்லையென்றால் நாடு இரண்டு திசை களில் இழுபட்டு முன்னேற்றத்துக்குத் தடை யாகும் என்றார். பாஜக அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் முதல் பலரும் ஒபாமாவைக் கண்டிப்பதோடு ‘அமெரிக்கா என்ன ஒழுங்கா’ என்ற ரீதியில் தாக்குதல்கள் தொடுத்தனர். இந்த விஷயத்தை நாட்டின் மூத்த அமைச்சர் எதிர்கொண்ட விதம் தன்னம்பிக்கையான உலக சக்தி என்று பிரகடனம் செய்து கொள்ளும் நாட்டிற்கு அழகல்ல.

ஒபாமா எதையும் புதிதாகச் சொல்லி விடவில்லை. 2014இல் மோடி பிரதமராக இருக்கும் போதே இந்திய குடியரசு தினத்தில் பிரதம விருந்தாளராகக் கலந்து கொள்ள வந்திருந்த அன்றைய அமெரிக்க ஜனாதி பதியான ஒபாமா டில்லியில் ஆற்றிய உரையில் தான் வளர்ந்த அமெரிக்காவில் தானும் தன்னைப் போன்றவர்களும் எதிர் கொண்ட ஒடுக்குமுறைகளையும் விமர்சித்து இந்தியாவில் சிறுபான்மையினர் பற்றியும் பேசினார்.

## ஏற்றுமதியாகும் இந்துத்துவம்

பொதுவாக புலம்பெயர்ந்த இந்தியர்கள், குறிப்பாக மேற்குலக நாடுகளில், 'முன் மாதிரி சிறுபான்மையினர்' என்று அழைக்கப் படுவதுண்டு. அம்மாதிரி வகைப்படுத்துவதே ஒரு சிக்கலான இன அரசியல் என்பது வேறு விவாதம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குக் குடியேறிய இந்தியர்கள் பலர் பட்டதாரிகள், அந்தந்த நாடுகளில் நடுத்தர, உயர் நடுத்தர வர்க்கத்தில் இவர்கள் இடம்பெற்றார்கள். புலம்பெயர் இந்தியர்கள் எந்தக் கலவரங்களிலோ ஏன் அரசியலிலோ கூட இடம்பெற்றதில்லை என்ற பிம்பம் உண்டு. இதனை பிம்பம் என்று ஏன் சொல்கிறேன் என்றால் புலம்பெயர் இந்தியர்களிடையே இருக்கும் சாதிப் பிரிவினைகள், சாதிச் சங்கங்கள் பற்றி அமெரிக்கர்களுக்கு அண்மைக்காலம் வரை அறிதல் கிடையாது.

இந்தியர்கள் பற்றி மேற்சொன்ன சித்திரம் அண்மைக்காலமாக மாற்றம் உண் டாகி இருக்கிறது, காரணம் ஏற்றுமதியாகும் இந்துத்துவம். இன்று இந்திய வெளியுறவுக் கொள்கை இந்துத்துவ மயமாகி இருக்கிறது என்று வெளியுறவு ஆய்வாளர்கள் பலர் கவனப்படுத்துகிறார்கள். இதன் மிக வெளிப் படையான பிரதிபலிப்புகளின் மாதிரிகளாக இரண்டு நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டலாம்,

அவை: ஒன்று, இங்கிலாந்தில் லீஸ்டர் எனும் நகரில் கடந்த ஆண்டு நிகழ்ந்த இந்து - முஸ்லிம் கலவரம். இரண்டு, நியூ ஜெர்ஸியில் இந்திய விடுதலை தினப் பேரணியில் உத்தரபிர தேச முதல்வர் இஸ்லாமிய வீடுகளை நொறுக் கப் பயன்படுத்தும் புல்டோசர் மாதிரி ஒன்று இடம்பெற்று சர்ச்சைக் கிளப்பியது ஆகியவை.

அமெரிக்காவில் நிறம், இனம் சார்ந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிரான சட்டங்களை விரிவாக்கி சாதியையும் சில மாநிலங்கள் சேர்க்க ஆரம்பித்த போது அதற்கு அமெரிக்காவில் இருக்கும் பாஜக சார் இந்துத்துவ அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. இந்து மதம், இந்திய வரலாறு குறித்து எழுதும் அமெரிக்கப் பல்கலைக்கழக ஆய்வாளர்களின் எழுத்துகளும் பேராசிரி யர்களுமே நேரடி அச்சுறுத்தல்களை இந்த இந்துத்துவ அமைப்புகளிடம் சந்திக்கின்றனர். மோடியின் இந்துத்துவ அரசியல் கடல் கடந்து புலம்பெயர் இந்திய சமூகங்களையும் பிளந் திருக்கின்றன என்றால் மிகையாகாது.

## எதிர்காலம்

மோடியின் அமெரிக்கப் பயணம் அமோக வெற்றி என்று சொல்லக் கூடிய தருணத் தில் இந்தியாவின் சிறுபான்மை விரோத மனநிலையும், விமர்சனங்களைக் காட்டமாக எதிர்கொள்ளும் சகிப்பின்மையும் ஒரு நல் விருந்தில் கடைசியில் கசப்பான பதார்த்தத்தைச் சாப்பிட்டால் என்ன உணர்வு எஞ்சுமோ அதனை அளித்தது எனலாம். அதற்காக இந்திய - அமெரிக்க உறவே பின்னடைவைச் சந்தித்தது என்றோ பயணமே விழலுக்கு இறைத்த நீர் என்பதோ அதீதம். வர்த்தக உறவுகள் இம்மாதிரி கசப்புகளை எளிதில் கடந்து நிலைபெறும் என்பதை அமெரிக்காவின் சர்வதேச உறவுகளின் வரலாறு சொல்லும். ஆனால் அதற்கும் இன்று எல்லைகள் உண்டு.

இந்தியா - அமெரிக்கா உறவு நீண்டதொரு வரலாறு கொண்டது. அதில் ஏற்ற இறக் கங்கள், ஏமாற்றங்கள் இரு தரப்பிலும் உண்டு. மோடியும் டொனல்ட் டிரம்பும் பரஸ்பரம் ஒரு வரையொருவர் வானளாவப் புகழ்ந்துக் கொண் டனர். ஆனால் இரு நாடுகளிடையேயான உற வில் எந்த முன்னேற்றமும் நடக்கவில்லை.

ஜோ பைடனுக்கும் மோடிக்கும் 2024 தேர்தல் ஆண்டு. இரு நாடுகளிலும் யார் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், சீனா எப்படிக் காய் நகர்த்தும், உக்ரைன் போர் எப்படி நீளும், அமெரிக்கப் பொருளாதாரத்தின் நிலை என்று பல சிக்கல்களை இந்திய - அமெரிக்க உறவு எதிர் நோக்குகிறது. நம்பிக்கையூட்டும் காரணங்களுமுண்டு. இரு நாடுகளிலும் யார் அடுத்த முறை ஆட்சி அமைத்தாலும் இந்திய - அமெரிக்க நல்லுறவு நீள வேண்டும் என்றே வெளியுறவுக் கொள்கைகள் இருக்கும். நம்பிக்கைகள் வெல்கிறதா இல்லை சவால்கள் வெல்கிறதா என்று பார்போம்.



# அமிர்த கால இந்தியாவில் ஆதிவாசிகள் அனுபவிக்கும் அநீதி

**- கே.எஸ். அப்துல் ரஹ்மான்**

*மாநிலத் தலைவர், வெல்ஃபேர் கட்சி*

இந்தியா விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் ஆனதையொட்டி ஒன்றிய அரசு அம்ருத்தோற்சவம் (அமிர்த கொண்டாட்டம்) என்ற பெயரில் விழாக்களை நடத்தியது. அந்த அம்ருத்தோற்சவ இந்தியாவில்தான் ஆதிவாசியின் மீது சிறுநீர் அபிஷேகம் செய்துள்ளான் சங்பரிவாரைச் சார்ந்த பிரவேஸ் சுக்லா.

சில மாதங்களுக்கு முன்பு மத்தியப் பிரதேச மாநிலம் சித்தியில் நடைபெற்ற இச்சம்பவம் சில தினங்களுக்கு முன் வீடியோவாக வெளிவந்தது. அந்த வீடியோ நமக்கு வருத்தத்தை அளித்தாலும் வியப்பளிக்கவில்லை. இந்தியாவில் அமிர்த காலத்தை உருவாக்குவோம் என வாய்ச்சவடால் அடிக்கும் பாரதிய ஜனதா கட்சியின் உள்ளூர் தலைவனான பிரவேஸ் சுக்லாதான் இந்தக் குரூரச் செயலைச் செய்துள்ளான் என்பதிலும் வியப்பொன்றுமில்லை. இந்தியா விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் ஆன பின்பும் தலித், ஆதிவாசி சமூகங்கள் அனுபவித்து வரும் அநீதிகளின் ஓர் அடையாளச் சித்திரம் மட்டுமே அந்த வீடியோ.



**பிரவேஸ் சுக்லா**

மத்திய பிரதேச மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சியின் முக்கியப் பிரமுகர்களில் ஒருவரான சட்டமன்ற உறுப்பினர் கேதார்நாத் சுக்லாவின் வலது கையான பிரவேஸ் சுக்லாவைக் கைது செய்தும் வீட்டின் ஒரு பகுதியை இடித்தும் தப்பிக்க நினைக்கிறது மத்தியப் பிரதேச மாநில அரசும் பாரதிய ஜனதா கட்சியும்.

அந்தச் சம்பவம் சில மாதங்களுக்கு முன்பு நடந்த ஒன்று. தலித் - ஆதிவாசி தனி நபர்களைச் சொல்லால் இழிவுபடுத்தினால் கூட அவர்கள் மீது தீண்டாமை வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் நமது நாட்டில் உள்ள சட்டம். ஆனால் ஆதிவாசியின் மீது சிறுநீர் கழித்த நிகழ்வு நடந்து பல மாதங்கள் ஆன பிறகும் எவ்வித நடவடிக்கையையும் மத்திய பிரதேச பாஜக அரசு எடுக்கவில்லை. இப்போது அவ்வீடியோ வைரல் ஆனதில் நாடு முழுவதும் அது கோப அலைகளை உண்டாக்கியுள்ளது. அதன்பிறகுதான் பிரவேஸ் சுக்லா கைது செய்யப்பட்டுள்ளான்.

இதற்குப் பிறகும் கூட கைது செய்யவில்லை என்றால் இருக்கும் கொஞ்ச நஞ்ச வெட்க உணர்வும் போய் விட்டது என்றுதான் புரிந்து கொள்ள வேண்டும். எனவே இதில் பெருமையடிக்க எந்த முகாந்திரமும் இல்லை. மத்திய பிரதேசத்தில் உள்ள 20 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றியைத் தீர்மானிக்க கூடிய சக்தியாக உள்ள கோல் என்ற பழங்குடியின கோத்திரத்தைச் சார்ந்தவர்தான் பாதிப்புக்கு ஆளான இளைஞர். இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் இப்பிரச்னை பாதிப்பை ஏற்படுத்தும்

என்பதாலும் இதை எதிர்க்கட்சிகள் ஓர் ஆயுதமாக உபயோகிக்கும் என்பதாலும் பாரதிய ஜனதா கட்சிக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது.

அது ஒரு புறம் இருக்க, தேசிய குற்றவியல் ஆவணங்களின்படி இந்தியாவிலேயே தலித்களுக்கும் பழங்குடியினருக்கும் எதிராகக் குற்றங்கள் நடக்கும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது மத்தியப் பிரதேசம் என்பதும் கவனிக்கத்தக்கது. அங்கு 2021ஆம் ஆண்டில் மட்டும் நடைபெற்ற குற்றங்கள். (இவை பதிவானவைகள் மட்டுமே)

★ தலித்களுக்கு எதிரான குற்றங்கள்: 7,214

★ பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள்: 2,627

பிரவேஸ் சுக்லாவைக் கைது செய்வதாலோ அவனது வீட்டின் ஒரு பகுதியை இடிப்பதாலோ அநீதிக்கு ஆளான ஆதிவாசி இளைஞனின் கால்களைக் கழுவுவதனாலோ இவை மாறப்போவதில்லை.

முஸ்லிம், கிறித்துவ சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக மட்டுமல்ல தலித், ஆதிவாசிகளுக்கு எதிராகவும் நாள்தோறும் குற்றங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளது. பள்ளியில் உள்ள தண்ணீர் பாத்திரத்திலிருந்து நீர் எடுத்து குடித்தான் என்பதற்காகத் தலித் சிறுவனை அடித்துக் கொன்ற ஆசிரியர், பாபாசாகிப் அம்பேத்கரின் புகழ் பாடும் பாடலைத் தனது அலைப்பேசியில் ரிங்டோனாக வைத்தது, தலித் இளைஞன் திருமண வேளையில் குதிரையில் சவாரி செய்தது, ஆதிக்க சாதி சமூகத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்தது போன்ற நிகழ்வுகள் எல்லாம் சாதி வெறியர்களை ஆத்திரமூட்டியது. அவர்கள் அனைவரும் சாதி வெறியர்களால் சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

அரியானா மாநிலம் கர்நாலில் அண்மையில் நடந்த ஒரு நிகழ்வு பெறும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. ஓர் ஆதிக்க சாதி வீட்டில் கால்நடைகளைப் பராமரிக்கும் பணியைச் செய்து வந்தார் பிரேம்சந்த் என்ற 50 வயது முதியவர். இவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஏன்? எதனால்? வேறொன்றுமில்லை. அவர் காலில் செருப்பு அணிந்து கொண்டு வீட்டில் நடந்தார் என்ற ஒற்றைக் காரணம் மட்டுமே. கடுமையாகத் தாக்கப்பட்டு குற்றுயிராகக் கிடந்த நிலையில் மருத்துவமனைக்கு வாகனத்தில் கொண்டு செல்லக் கூட அவர்கள்








பிரேம்சந்த்



அனுமதிக்கவில்லை என அவரது மகன் புலம்புகிறார்.

தலித் இளைஞர்களை அடித்துக் கொல் வதும் பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்வதும் அன்றாடச் செய்திகளாகிவிட்ட காரணத்தினால் ஊடகங்கள் அவற்றை எதுவும் கண்டு கொள்வதில்லை. தலித், ஆதிவாசி, முஸ்லிம்கள் மீது நடக்கும் கொடுமைகளைக் கண்டு நாட்டின் பொது மனசாட்சிக்கு எந்தக் கவலையோ வேதனையோ ஏற்படுவதில்லை. பொது சமூகத்தின் இந்த மௌனமே சங்பரிவார் கும்பல்களுக்குப் பெரும் ஊக்கத்தை அளிக்கிறது. சாதி வெறியர்களுக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்கள் மீது ஒன்றிய அரசும் சங்பரிவாரும் எடுக்கும் நடவடிக் கைகளும் அவர்களது தயக்கத்திற்கும் மௌனத்திற்கும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆதிவாசி சமூகத்தின் நலனுக்காகவும் உரி மைகளுக்காகவும் போராடி வந்த பாதிரியார் ஸ்டாண்ட் சுவாமி, பொய் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு இறுதியில் பலியானார். பீமா கோரகான் கலவர நிகழ்வைக் காரணம் காட்டி பல சமூக செயல்பாட்டாளர்களும் சிறையில் அடைக் கப்பட்டுள்ளனர். உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராசில் வன்கொடுமை செய்யப்பட்டு குடும்பமே சீரழிக்கப்பட்ட தலித் சிறுமி யின் வீட்டிற்குச் செய்தி சேகரிக்கச் சென்ற ஒரே காரணத்திற்காக கைது செய்யப் பட்டு சிறையில் கொடுமைக்கு ஆளாக்கப் பட்ட பத்திரிகையாளர் சித்தீக் காப்பன் நமக்கு முன்னால் உயிர்வாழும் சாட்சியாவார்.

தலித், ஆதிவாசி சமூக மக்களைக் கையாள் களாகப் பயன்படுத்தி மனு ராஜ்ஜியத்தை உரு வாக்க சங்பரிவார் இந்துத்துவ பயங்கரவாத சக்திகள் முனைகின்றார்கள். அவர்களிடம் அதிகாரம் கிடைத்து விட்டாலோ அந்தச் சமூகங்கள் ஓரங்கட்டப்படும். புதிய நாடாளுமன்றக் கட்டிடத் திறப்பு விழாவின் போது குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஓரம் கட்டப்பட்டதைப் போல. ச


# HIJAZ

## LEATHERS PVT. LTD.,

**Tanners & Exporters of**
**Finished Leathers & Fashion Gloves**

**HEAD OFFICE :**
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

**TANNERY :**
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

**GLOVE FACTORY :**
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com




# ஹிஜாபின் வரலாறு

– மௌலவி முஹம்மது சித்தீக் மதனி

ஹிஜாப் தொடர்பான இறைவசனம் இறங்கியது. இது நேரடியாக நபி(ஸல்) அவர்களுடைய மனைவியர்களைக் குறித்துப் பேசுகிறது. ஏனெனில் அவர்கள் நபியவர்களுக்கு மிகவும் நெருங்கியவர்கள். பொதுவாக மற்றப் பெண்களை விட மதிப்பிற்குரியவர்கள். இந்த வசனம் நபி(ஸல்) அவர்களுடைய மனைவிகள் விஷயத்தில் இறங்கினாலும் இது எல்லா முஸ்லிமான பெண்கள் மீதும் ஹிஜாபைக் கடமையாக்குகின்றது.

### ஹிஜாப் - சட்டம் - காரணம்

ஹிஜாப் சம்பந்தமாக திருவசனங்கள் இறங்க வேண்டும் என்று உமர்(ரலி) அவர்கள் விரும்பினார்கள். இதுகுறித்து அவர்கள் நபியவர்களிடம் இவ்வாறு கூறினார்கள். ‘அல்லாஹ்வின் தூதரே! தங்களிடம் நல்லவர்களும் வருகின்றனர். மற்றவர்களும் வருகின்றனர். ஆகவே, (தங்கள் துணைவியரான) இறை நம்பிக்கையாளர்களின் அன்னையரை பர்தா அணியும்படி தாங்கள் கட்டளை யிடலாமே!’ என்று கேட்டேன். அவ்வாறே, அல்லாஹ் பர்தா (சட்டம்) குறித்த வசனத்தை அருளினான்.

மேலும் கூறினார்கள். ‘நபியவர்களின் மனைவியர்கள் விஷயத்தில், மக்கள் எனது விருப்பத்திற்குக் கட்டுப்பட்டால், அவர்களை எந்தக் கண்ணும் பார்க்க முடியாது. அப்போது இறைவன் ஹிஜாபுடைய வசனத்தை இறக்கினான்’. (புகாரி:4483)

‘நபியவர்களின் மனைவியர்களிடம் நீங்கள் ஏதேனும் கேட்க வேண்டுமென்றால், திரைக்குப் பின்னாலிருந்து கேளுங்கள். உங்களுடையவும், அவர்களுடையவும் உள்ளங்களின் தூய்மைக்கு இதுவே ஏற்ற முறையாகும்’. (திருக்குர்ஆன் 33:53)

இன்னும் சிலர் கூறினர்: 'எங்களுடைய சிறிய தந்தை, பெரிய தந்தையர்களின் பெண் பிள்ளைகளுடன் பேசுவதற்கு எங்களுக்குத் தடையா! நாங்கள் ஹிஜாபுக்குப் பின்னால் இருந்து தான் பேச வேண்டுமா என்ன!' என்று சிலர் பேசினர். 'முஹம்மது(ஸல்) இறந்து விட்டால் அதற்குப் பின்னர் நான் ஆயிஷா (ரலி) அவர்களை மணப்பேன்' என்று ஒருவர் கூறினார். அப்போது இறைவன் இந்த வச னத்தை இறக்கினான்: 'அல்லாஹ்வுடைய தூத ருக்குத் தொல்லை கொடுப்பது உங்களுக்கு ஆகுமானதல்ல. அவருக்குப் பின்னர் அவ ருடைய மனைவியரை நீங்கள் திருமணம் முடிப்பது ஒருபோதும் ஆகுமானதன்று. அவ்வாறு செய்வது அல்லாஹ்விடம் திண்ண மாக, பெரும் பாவமாகும்'. (திருக்குர்ஆன் 33:53)

பிற முஃமினான பெண்களைப் பொறுத்த வரை, ஆண்களுக்குக் கட்டளை இடப்பட்ட தைப் போன்று, இவர்களும் தங்கள் பார்வை களைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும், கற்பைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளை இடப்பட்டார்கள்.

## மறைக்கப்பட வேண்டிய பகுதிகள்

பெண்கள் அந்நிய ஆண்களுக்கு முன்னால் தங்கள் அழகை வெளியில் காட் டக்கூடாது என்று கட்டளை இடப்பட்டார்கள். ஆனால் தாமாக வெளியே தெரிகின்ற அழகு தவிர! விரல்களில் அணியும் மோதிரங்கள், உள்ளங்கைகளில் பூசப்பட்ட மருதாணி, கண்களில் தீட்டப்படும் சுருமா வெளியில் தெரிந்தால் பரவாயில்லை.

ஆனால் உடல்களில் மறைந்திருக்கும் அழகை வெளியில் ஒருபோதும் காட்டக் கூடாது. மணிக்கட்டுக்கு அடுத்துள்ள கைகளில் அணியும் வளையல்கள், முழங்கைகளுக்கு அடுத்த கை பகுதியில் அணியும் காப்புகள், ஆபரணங்கள், கணுக்காலில் அணியும் வளையங்கள், ஆபரணங்கள், கழுத்தில் அணியும் மாலைகள், தலையில் அணியும் பல்வேறு ஆபரணங்கள், சங்கிலிகள், மாலைகள், காதுகளில் அணியும் தோடுகள் ஆகிய மறைந்திருக்கும் அழகை வெளியில் காட்டக் கூடாது.

மட்டுமல்ல, அவர்கள் தங்கள் மார்பின் மீது முன்றானைகளைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

## அறியாமைக்கால பெண்கள்

அக்காலத்தில் வாழ்ந்த பெண்களின் கழுத்து, நெஞ்சு, அதைச் சுற்றிய பகுதிகள் வெளியில் தெரிந்தன. அவர்களின் ஆடைகள் அப்படித்தான் இருந்தது. அவர்கள் தங்களின் முன்றானைகளைப் பின்புறம் தொங்க விட்டுக் கொண்டிருந்தார்கள். எனவே அவர்கள் தங்கள் முன்றானைகளை முன் புறம் தொங்க விடும்படி கட்டளை இடப் பட்டார்கள்.

அவர்கள் தாங்கள் கொலுசுகள் அணிந் திருக்கின்றோம் என்பதை வெளியில் கூறுவதற்காக, தங்கள் வருகையைப் பதிவு செய்வதற்காகத் தங்கள் கால்களை பூமியில் அடித்துக் கொண்டு ஓசை எழுப்பிக் கொண்டு நடந்தார்கள். அது இப்போது தடுக்கப்பட்டது. ஒரு பெண் தனது ஆபரணத்தின் ஓசையழகைக் கூட வெளியில் காட்டக் கூடாது எனில், அதைச் சுமந்து கொண்டிருக்கும் உறுப்பு களை வெளியில் காட்டுவதற்கு எவ்வாறு அனுமதிக்கப்படுவாள்?

இறைவன் கூறுகின்றான்: 'மேலும் (நபியே!) இறைநம்பிக்கைகொண்ட பெண் களிடம் கூறும்: அவர்கள் தங்களுடைய பார்வைகளைப் பேணிக் கொள்ளட்டும். தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாது காக்கட்டும்; தங்களுடைய அழகை வெளி யில் காட்டாதிருக்கட்டும்; அதிலிருந்து தாமாக வெளியே தெரிகின்றவற்றைத் தவிர! மேலும், தங்களுடைய மார்புகள் மீது தங்கள் முன்றானையைப் போட்டுக் கொள்ளட்டும். தங்கள் கணவன்மார்கள், தங்களுடைய தந்தையர்கள், தங்கள் கணவன்மார்களின் தந்தையர், தங்களுடைய மகன்கள், தங்கள் கணவன்மார்களின் மகன்கள், தங்கள் சகோ தரர்கள், தங்கள் சகோதரர்களின் மகன்கள்,

சகோதரிகளின் மகன்கள், தங்களுடன் நெருங்கிப் பழகும் பெண்கள், தங்களுடைய ஆண், பெண் அடிமைகள், தவறான வேட் கைகளில்லாத தம்மை அண்டி வாழு கின்ற ஆண்கள், மேலும், பெண்களின் அந்தரங்க விஷயங்களைப் பற்றி எதுவும் தெரிந்திராத சிறுவர்கள் ஆகிய இவர்கள் முன்னிலையிலன்றி (வேறு எவரிடத் திலும்) தங்களுடைய அழகை அவர்கள் வெளிக்காட்ட வேண்டாம். தாங்கள் மறைத்து வைத்திருக்கும் தங்களின் அழகை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென் பதற்காக தங்களுடைய கால்களை(ப் பூமி யில்) அடித்துக் கொண்டு நடக்க வேண் டாம். நம்பிக்கையாளர்களே! நீங்கள் அனை வரும் ஒன்றுசேர்ந்து அல்லாஹ்வின் பக்கம் பாவ மன்னிப்புக் கோரி மீளுங்கள். நீங்கள் வெற்றியடையக் கூடும்'. (திருக்குர்ஆன் 24:31)

ஹிஜாப் தொடர்பான சட்டங்கள், நபி(ஸல்) அவர்களின் மனைவியர்களுக்கும், பிற முஸ்லிமான பெண்களுக்கும் பொதுவானது. எனவே அனைத்துப் பெண்களும் ஹிஜாப் அணியவேண்டும். முஸ்லிம் பெண்கள் தொடக்க காலகட்டத்தில், அறியாமைக் காலத்தில் இருந்ததைப் போன்று உடையணிந் தார்கள். அடிமைப் பெண்ணுக்கும் சுதந்திர மான பெண்ணுக்கும் இடையில் உடையில் எந்த வேறுபாடும் இருக்காது. அடிமைப் பெண்கள் தங்கள் இயற்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மறைவிடங்களை நோக்கி இரவில் வெளியே வருவார்கள். அப்போது சில தீய இளைஞர்கள் அவர்களைச் சீண்டுவார்கள். இடைமறிப்பார்கள். தொந்தரவு கொடுப்பார்கள். அப்போது இறைவன் ஹிஜாப் வசனத்தை இறக்கினான்.

இறைவன் கூறுகின்றான்: 'நபியே! உம்மு டைய மனைவிகள், உம்முடைய புதல்விகள், நம்பிக்கையாளர்களின் மனைவியர் ஆகி யோரிடம் கூறும்: அவர்கள் தங்களுடைய துப்பட்டிகளின் முந்தானையைத் தங்களின் மீது தொங்கவிட்டுக் கொள்ளட்டும். அவர் களை அறிந்து கொள்வதற்கும், அவர்கள் தொல்லைக்கு ஆளாகாமலிருப்பதற்கும் இதுவே மிகவும் ஏற்ற முறையாகும். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும், கிருபைமிக்கவனாகவும் இருக்கின்றான்'. (திருக்குர்ஆன் 33:59)

## அபாயா அணிதல்

இந்த வசனத்தில் 'ஜல்பாப்' எனும் ஆடையைத் தொங்க விட வேண்டும் என்று கட்டளையிடப்படுகின்றது. ஜல்பாப் என்றால் உடல் முழுவதையும் மறைக்கும் அதிகப் படியான கூடுதல் ஆடை என்று பொருள். (குர்துபி, இப்னு கஸீர்) இதற்கு அபாயா என்றும் அரபு மக்கள் கூறுவார்கள். இதற்கு முந்தைய வசனத்தில் (அந்நூர் 31) 'ஃகுமுர்' எனும் ஆடையைத் தொங்க விட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. இச்சொல் ஃகிமார் எனும் சொல்லின் பன்மையாகும். ஃகிமார் என்றால் தலையை, தலை முடிகளை, கழுத்தை, நெஞ்சுப் பகுதியை விசேஷமாக மறைக்கும் ஆடையாகும். (குர்துபி, இப்னு கஸீர்)

ஹிஜாப் என்றால் உடல் முழுவதையும் மறைக்கும் அதிகப்படியான கூடுதல் ஆடை அணிவது. கூடுதலாகத் தலையை, முடியை, கழுத்தை, நெஞ்சுப் பகுதிகளை விசேஷமாக மறைக்கும் ஆடையை அணிவது. இதன் மூலம் தங்கள் அழகை வெளியில் காட்டாமல் இருக்க முடியும்.

முகத்தையும் மறைக்க வேண்டும் என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர். இப்னு அப்பாஸ்(ரலி) கூறுகின்றார்கள்: 'பெண்கள் ஏதும் தேவைகளுக்காக வீடுகளை விட்டும் வெளியே செல்ல நேர்ந்தால், அவர்கள் தங்கள் முகங்களையும் முந்தானையால் மறைத்துக் கொள்ளட்டும்.'

சில அறிவிப்புகள் கூறுகின்றன: 'இந்த ஹிஜாப் வசனம் இறங்கியபோது அன்சாரிப் பெண்கள் ஹிஜாப் அணிந்து சென்றார்கள். அவர்களின் தலையில் கருப்பாடைகள் இருந்தது. தலைகளில் காகங்கள் அமர்ந்ததைப் போன்று இருந்தது'. (நூல்: பர்தா, அபுல் அஃலா மௌதூதி ரஹ்)

### திருமணத்திற்காக!

திருமணத்திற்காகப் பெண் பார்க்க ஒருவர் வந்தால், பெற்றோர் முன்னிலையில் அவர் பெண்ணைப் பார்ப்பதற்கு அனுமதி உண்டு. பெரியோர் முன்னிலையில் ஒருவரை ஒருவர் பார்த்து, திருமணம் முடிக்கும் போது இரு வருக்கும் இடையில் நல்லிணக்கம், பாசம், ஈர்ப்பு, ஒற்றுமை ஏற்படும்.

இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்கள் கூறு கின்றார்கள். 'அன்பு, பாசம், ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும் அனைத்து வழிவகைகளையும் கையாள வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. அவற்றில் ஒன்றுதான் பெண் பார்ப்பது'.

நபி(ஸல்)கூறினார்கள்: 'ஒருவர் ஒரு பெண்ணை திருமணம் செய்ய விரும்பினால், திருமணம் முடிப்பதற்கு முன்னர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள வேண் டும். இது அவ்விருக்கிடையில் அன்பை வளர்க்கும். ஒற்றுமையை நீட்டிக்கும்'. (திர்மிதி 1087, இப்னு மாஜா1866)

நான் (ஒருமுறை) நபி(ஸல்) அவர்கள் அருகில் இருந்தேன். அப்போது அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, தாம் அன்சாரிகளில் ஒரு பெண்ணை மணம் முடிக்கப்போவதாகத் தெரிவித்தார். அவரிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'நீர் அந்தப் பெண் ணைப் பார்த்துவிட்டீரா?' என்று கேட் டார்கள். அதற்கு அவர் 'இல்லை' என்றார். அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள், 'அவ்வாறாயின், நீர் சென்று அவளைப் பார்த்துக்கொள்ளும்! ஏனெனில், அன்சாரி களின் கண்களில் சிறிது (குறை) உண்டு' என்று சொன்னார்கள். (அபூஹுரைரா(ரலி), முஸ்லிம் 2783)

நமது முன்னோர்கள், திருமணம் முடிப் பதற்கு முன்னால், முதலில் மணமகளை, அல்லது மணமகனை முதலில் பார்ப் பார்கள். இமாம் அஃமஷ்(ரஹ்) கூறுகின்றார்: 'ஒருவரை ஒருவர் பார்க்காமல் திருமணம் முடித்தால் பின்னால் கவலையும் துன்பமும் தான் எஞ்சும்'.

- தொடரும்

## ஹிஜ்ரி நாள்காட்டி




ஏனைய பிற நாள்காட்டி, புத்தாண்டுகளைப் போலவே இஸ்லாத்தின் நாள்காட்டியும் அதன் அடிப்படையிலான புத்தாண்டும் உள்ளது. வருகிற ஜூலை 16ஆம் தேதி இஸ்லாமிய நாள்காட்டியின் 1445ஆவது புதிய ஆண்டு பிறக்கிறது. நபி(ஸல்) அவர்கள் ஓரிறைக் கொள்கையை நிலைநாட்ட தங்களின் உறவுகள், உடைமைகள் என அனைத் தையும் விட்டு மக்காவிலிருந்து மதீனாவிற்கு நாடு துறந்த இஸ்லாமிய வரலாற்றின் திருப்புமுனைப் பக்கமான ஹிஜ் ரத்தை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய ஆண்டின் தொடக்கம் கணக்கிடப்பட்டதால் அது ஹிஜ்ரி ஆண்டு என அழைக்கப்படுகிறது. இஸ்லாமிய நாள்காட்டி பிறையைப் பிரதான அளவுகோலாக வைத்துக் கணக்கிடப்படுகிறது.

'முஹர்ரம், ஸஃபர், ரபீஉல் அவ்வல், ரபீஉல் ஆகிர், ஜமாஅத்துல் அவ்வல், ஜமாஅத்துல் ஆகிர், ரஜப், ஷஅபான், ரமளான், ஷவ்வால், துல்கஅதா, துல்ஹஜ்' ஆகியவை 12 இஸ்லாமிய மாதங்களின் பெயராகும். யவ்முல் அஹத் (Sunday), யவ்முல் இஃத்னைன்(Monday), யவ்முல் ஃதலாத (Tuesday), யவ்முல் அர்பஅ (Wednesday), யவ்முல் ஹமீஸ் (Thursday), யவ்முல் ஜுமுஆ (Friday), யவ்முல் ஸப்த் (Saturday) ஆகியவை ஏழு இஸ்லாமிய நாள்களின் பெயராகும்.



# அர்த்தமுள்ள மரணம்

**- S.சாகுல் ஹமீது**

‘ஒவ்வொரு உயிரினமும் மரணத்தைச் சுவைத்தே தீரும். மேலும் நல்ல, கெட்ட நிலைமைகளைத் தந்து நாம் உங்களைச் சோதித்துக் கொண்டிருக்கின்றோம். பிறகு நீங்கள் நம்மிடமே திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்.’ (திருக்குர்ஆன் 21:35)

மரணம் மிக வித்தியாசமானது. ஒவ்வொரு மனிதனும் மரணிக்கும் விதங்களும் மிக மிக வித்தியாசமானது. கூட்டாக மரணம் அடைவது ஒரு வகை மரணம். பூகம்பம், சூறாவளி, கடும் மழை வெள்ளம், போர், கொடிய விபத்துகள் போன்ற மொத்தமாக மனிதர்கள் மரணங்கள் அடைவது ஒரு வகை மரணம்.

வன்முறை, கலவரம், கும்பல் கொலை, அடித்துக் கொலை, சாதியக் கொலை, ஆணவக் கொலை, விலங்குகள் தாக்கி மரணம் கொடிய நோய்களால் வரும் மரணங்கள் இவையும் ஒரு வகை மரணம் தான். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பல வடிவங்களிலே மரணத்தை அடைந்தே தீருவார்கள். மேலே சொன்ன அந்த மரணங்கள் எல்லாம் இறைவனின் விதியில் கூட்டாக நடப்பது. இன்னும் சொல்லப்போனால் அதில் பல மரணங்கள் ஷஹீத்களின் அந்தஸ்தைக் கூடப் பெற்றுவிடும்.

ஒவ்வொருவரின் மரணமும் எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும்? அர்த்தமுள்ள மரணமாக இருக்க வேண்டுமா? அல்லது அர்த்தமற்ற மரணமாக இருக்க வேண்டுமா? ஒரு முஸ்லிம் இந்த உலகின் அழைப்பாளன். தீனை நிலை நாட்டுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமை. ஒரு முஸ்லிமுடைய மரணம் இறைவனுக்கு விருப்பமான முறையில் நிகழ வேண்டும். அதுவே அர்த்தமுள்ள மரணமாக அமையும்.

‘எவர் அல்லாஹ்வின் வழியில் ஹிஜ்ரத் செய்கின்றாரோ, அவர் பூமியில் எண்ணற்ற தங்குமிடங்களையும் வாழ்வதற்கான பெரும் வசதி வாய்ப்பையும் காண்பார். மேலும் ஒருவர் அல்லாஹ்வின் பக்கமும், அவனுடைய தூதரின் பக்கமும் ஹிஜ்ரத் செய்வதற்காகத் தன்னுடைய வீட்டை விட்டு வெளியேறிய பிறகு (வழியிலேயே) அவருக்கு மரணம் ஏற்பட்டுவிட்டால், திண்ணமாக அவருக்கு நற்கூலி வழங்குவது அல்லாஹ்வின் பொறுப்பாகிவிட்டது. அல்லாஹ் மிகவும் மன்னிப்பு வழங்குபவனாகவும், கருணை பொழிபவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:100)

ஒரு முஸ்லிமுடைய எண்ணங்களும், சிந்தனைகளும் இறைமார்க்கத்தை இந்த பூமியிலே நிலைநாட்டுவதிலும் சமுதாயத்தின் மீது அக்கறையும், பரிவும் கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஒரு தனி மனிதனாக இந்த சமுதாயத்திற்கும் மார்க்கத்திற்கும் குறிப்பாக தன் மறுமை வெற்றிக்காக, மரணம் தம்மைத் தழுவும் முன் ஏதேனும் ஒரு துறையில் சாதித்துள்ளோம் என்ற வகையிலே நம்

மரணம் அமைந்தால் அதுவே அர்த்தமுள்ள மரணமாக இருக்கும்.

குறைந்தபட்ச ஆசையும் இலக்கும் இருக்க வேண்டும். முதலில் இன்று நம் சமுதாயத்திற்கு எந்த மாதிரியான தேவைகள் இருக்கிறது என்ற புரிதல் கொண்ட பட்டியல் நமக்கு வேண்டும். இலக்குகளை அடைந்த இஸ்லாத் தின் தொடக்ககாலப் பணிகளை எடுத்துச் சென்ற நபி(ஸல்) அவர்களின் முன்மாதிரி களும் நபித்தோழர்கள் நிகழ்த்திய சாதனைகள் குறித்த தெளிவும் நமக்கு வேண் டும். இந்த மார்க்கத்தை இந்த நூற்றாண்டு வரை எடுத்து வந்த இஸ்லாமிய அறிஞர்களுடைய மகத்தான சாதனைகளை நாம் அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்களுடைய மரணம் எப் படிப்பட்டதாக இருந்தது? ஒரு சாதாரண மனிதன் பிறந்து வாழ்ந்து எப்படி மரணிப் பானோ அதே போல் இருந்ததா? அல்லது ஒரு மகத்தான மாற்றத்தை, புரட்சியை உரு வாக்கி முன்மாதிரியாக வாழ்ந்து சரித்திரம் படைத்தவர்களாக மரணித்தார்களா என் பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட நபித் துவத்தின் 23 ஆண்டுகளில் வெறும் கற் களையும், மண்ணையும் வணங்கி வாழ்ந்து கொண்டிருந்த மக்களை சத்தியத்தின் பக்கம் அழைத்து ஓர் இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என்று அழைப்பு விடுத்து அதனால் ஏற்பட்ட பல்வேறு சிரமங்களையும் துன்பங்களையும் சகித்துக் கொண்டு ஒரு மகத்தான ஏகத்துவப் புரட்சியை நிலைநாட்டினார்கள். அப்படிப் பட்ட சாதனையைச் செய்வதில் தனிமனி தனாக என் பங்கு என்னவென்று ஒவ் வொருவரும் தங்களுக்குள்ளே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்த ஒரு சமூகத்தை மூடநம்பிக்கை என்றால் என்னவென்று கேட்கும் அளவிற்கு அற்புத மான அறிவாற்றல் கொண்ட மக்களாக நபி(ஸல்) அவர்கள் உருவாக்கியது மிகப் பெரிய சாதனை அல்லவா! பெண் குழந் தைகளை உயிரோடு புதைத்த பழக்கத்தைக் கொண்டிருந்த அம்மூடர்களை பெண் இனத்திற்கே பாதுகாவலர்களாய் மாறுகின்ற அளவு அறிவொளியை நபி(ஸல்) அவர்கள் பாய்ச்சினார்களே அது சாதனை!

மதுவிலேயே மூழ்கி ஒவ்வொரு பொழு தையும் கழித்துக் கொண்டிருந்த மொடாக் குடியர்களை மது என்றால் என்ன என்று கேட்கிற அளவிற்கு ஒரு மகத்தான பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்திக் காட்டினார்களே அது சாதனை. ஒற்றுமையாக வாழ்வது என்றால் என்னவென்றே தெரியாத ஒரு சமூகத்தை, தனது சாதியப் பெருமைகளை காலின் கீழே போட்டு மிதிக்க கூடிய அளவு அவர்களுக்கு நன்னெறி போதித்து ஒரே சகோதரர்களாக மாற்றிக் காட்டினார்களே அது சாதனை!

நிறைய மாற்றங்களையும் சாதனைக ளையும் செய்து தன் நபித்துவப் பணியைச் சிறப்பாக முடித்துவிட்டுத்தான் நபி(ஸல்) அவர்கள் மரணம் அடைந்தார்கள். நபி (ஸல்) அவர்களை உயிருக்கும் மேலாக மதித்து வாழக்கூடிய நாம்; அவர்கள் நம் மிடம் விட்டுச் சென்ற பணிகளைச் செய் கிறோமா?

மார்க்கம், சமுதாயம், மறுமை வெற்றி என எதற்குமே போதிய கவனம் செலுத் தாமல் வாழ்ந்து மரணிக்கும் நம்முடைய மரணங்கள் அர்த்தமுள்ள மரணமாக இருக் குமா?

நீங்கள் நபித்தோழர்களை எடுத்துக் கொள் ளுங்கள். பெரும்பாலான நபித்தோழர்கள் மகத்தான சாதனைகளைச் செய்துவிட்டுத் தான் மரணித்திருக்கிறார்கள். சத்திய இஸ்லாத்தின் காற்றை உலக மக்கள் அனைவரும் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகவே ஊர், நாடு, கண்டம், கடல் கடந்து உலகின் பல பகுதிகளுக்கும் நபித்தோழர்கள் பயணித்துள் ளார்கள். நாம் என்றைக்காவது இந்த சத்திய மார்க்கத்தைச் சொல்வதற்காகப் பயணித்

திருக்கிறோமா? அதில் ஏதேனும் சாதித்துள்ளோமா?

நமது நாடு வரை நபித்தோழர்கள் வராமல் போயிருந்தால் நம்மால் இந்த சத்திய மார்க்கத்தில் இன்று வாழ்ந்திருக்க முடியுமா? பல சஹாபாக்கள் ஏதேனும் ஒரு துறையில் மகத்தான சாதனைகளை நிகழ்த்தி விட்டுத் தான் மரணித்திருக்கிறார்கள்.

அவர்கள் வியாபார, கல்வி, புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்தல், மருத்துவத்துறையிலே சாதனை, பயணங்களில் சாதனை, புதிய மொழிகளைக் கற்றல் என இன்றைய நவீனங்களாக எதையெல்லாம் மனித இனம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறதோ அதற்கெல்லாம் அன்றே மூல விதைகளாக இருந்திருக்கிறார்கள்.

இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் ஹதீஸ்களைத் தேடித் தேடி அலைந்து பல சிரமங்களுக்கு மத்தியில் அதனைத் தொகுத்து, தொகுத்ததில் பலவற்றைக் கழித்து சில ஆயிரம் ஹதீஸ்களை மட்டுமே மொத்த முஸ்லிம் உம்மத்திற்காக விட்டுச் சென்றது எவ்வளவு பெரிய சாதனை. அவரால் தொகுக்கப்பட்டு நமக்கு வழங்கப்பட்டுள்ள ஹதீஸ்களைத் தானே நாம் பெரும்பாலும் பின்பற்றுகிறோம். சிஹாகு சித்தாவின் முதல் நூலே புகாரி தானே! நமக்கு ஏதேனும் மார்க்க விஷயத்தில் ஃபத்வா தேவைப்பட்டால் திருக்குர்ஆனுக்கு அடுத்தபடியாக புகாரியில் தானே பார்க்கிறோம். அந்த அளவிற்கு தன்னுடைய பங்களிப்பை அவர் செலுத்தி விட்டு மரணம் அடைந்திருக்கிறார். நிச்சயம் அது அர்த்தமுள்ள மரணம் தானே!

இந்தச் சமூகத்திற்காக அவர் அற்புதமான நபிமொழித் தொகுப்புகளை விட்டுச் சென்றார். மரணத்திற்குப் பிறகு நாம் இந்தச் சமூகத்திற்காக எதை விட்டுச் செல்லவிருக்கிறோம்? நமக்கென்று சாதிக்க ஒன்றுமே இல்லையா? அல்லது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்கில்லையா?


14 நூற்றாண்டு கால இஸ்லாமிய அறிஞர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவரவர்களின் காலகட்டத்தில் அன்றைய முஸ்லிம்களுக்கு எதுவெல்லாம் தேவைகளாக இருந்ததோ அதைப் பூர்த்தி செய்து கொடுக்கும் வகையிலே மிகப்பெரிய அர்ப்பணிப்பைச் செய்து இருக்கிறார்கள். மத்ஹப் இமாம்கள் தொடங்கி அண்மையில் மரணித்த டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி(ரஹ்) வரை மகத்தான சாதனைகளை இந்த சமூகத்திற்காகச் செய்துவிட்டுத்தான் அவர்கள் மரணித்திருக்கிறார்கள். அவர்களைப் போன்ற அர்த்தமுள்ள மரணமாக நம்முடைய மரணமும் இருக்க வேண்டும்.

**மரணத்திற்குப் பிறகு நாம் இந்தச் சமூகத்திற்காக எதை விட்டுச் செல்ல இருக்கிறோம்? நமக்கென்று சாதிக்க ஒன்றுமே இல்லையா? அல்லது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்கில்லையா?**

நபி(ஸல்) அவர்கள், நபித்தோழர்கள், இஸ்லாமிய அறிஞர்கள் அளவிற்குப் பெரிய சாதனைகளும், தியாகமும், அர்ப்பணிப்புகளும் நம்மால் முடியவில்லை என்றாலும் குறைந்தபட்சமாக சிறிய ஆசையும் இலக்கும் நமக்கு இருக்க வேண்டியது அவசியம்.

இப்போது முஸ்லிம் சமூகத்திற்கும் உலகம் மாந்தர்கள் அனைவருக்கும் நன்மையான தேவைகள் எதுவெல்லாம் இருக்கிறதோ நாம் அதில் ஏதேனும் ஒரு துறையில் சாதனையை நிகழ்த்திய பிறகு தான் மரணிக்க வேண்டும் என்கிற ஆசையும் இலக்கும் நமக்கு இருக்க வேண்டும். அப்போது தான் நம் மரணம் அர்த்தமுள்ள மரணமாக இருக்கும்.

**கட்டுரையாளரைத் தொடர்பு கொள்ள : 9629325670**



# என்ன செய்வதாய் உத்தேசம்?

**- அம்மு**

கதை சொல்ல வேண்டும்
அந்தக் கதையை
நிஜம்போலச் சொல்லத் தெரியவேண்டும்
நீங்கள் காவல்துறை
வேலையைத் தேர்ந்தெடுக்கலாம்

நன்றாகப் பொய்பேச வேண்டும்
பொய் என்று தெரிந்தும்
அதை மெய்யாக்கிக் காட்ட வேண்டும்
இந்தச் சாமர்த்தியம் உங்களிடமிருந்தால்
நீங்கள் வழக்கறிஞராவது சுலபம்

மனுநீதி தெரிந்திருந்தால் போதும்
ஆட்சியாளரின் விருப்பங்களை மதித்து
கூட்டுமனசாட்சியை அறியும் ஆற்றல் இருந்தால்
நீங்களே நீதிபதி

இழுத்தடிக்க வேண்டும்
பேரம் பேசும் வல்லமை வேண்டும்
சோம்பல் தூக்கம் அரட்டை போதும்
அரசு அலுவலராகலாம் நீங்களும்

அறிக்கை விடத் தெரிய வேண்டும்
மாற்றிமாற்றிப் பேசும் நாவன்மை வேண்டும்
போலி வாக்குறுதிகளைக் கூசாமல்
சொல்ல வேண்டும்
வாரிசாக இருந்தால் இன்னும் நல்லது
இல்லையேல் சினிமா வெளிச்சம் கைகொடுக்கும்
தேவைப்படும்போது நெஞ்சுவலி வரவேண்டும்
இந்தத் தகுதிகள் அமையப்பெற்றால்
அரசியல்வாதி நீயேதான்

உரத்துப்பேச
மடக்கிப் பேசத் தெரியுமா?
உண்மையை உதறித்தள்ளி
பொய்யை ஊதிப்பெருக்க வேண்டும்
தொலைக்காட்சிச் சேனலுக்கு நீ
பொருத்தமானவன்

எதுவும் தெரியவில்லையா
ஓரமாய்ப் போய் நில்
வாக்களிக்க நீயும்
வரிசையில் வரலாம்

# பூனைகளைப் பற்றிய தகவல்கள்



அன்புச் சிறார்களே..!

வாருங்கள் பூனைகளைப் பற்றிய சில தகவல்களைத் தெரிஞ்சுக்கலாம்!

பூனைகள் மனிதர்களால் அதிக அளவு விரும்பப்படும் செல்லப் பிராணிகளில் ஒன்று. அழகான, சுறுசுறுப்பான, விளையாட்டுத்தனமான இந்தப் பூனைகள் எளிதில் மனிதர்களுடன் பழகும் தன்மை கொண்டவையாகவும் திகழ்கின்றன.

- **பூனைகள் அவற்றின் உயரத்தை விட 6 மடங்கு உயரம் வரை குதிக்கும் தன்மையுடையவை**

பூனைகளின் கால்களில் மிகவும் வலுவான தசைகள் இருக்கின்றன. அவை பூனைகளை எளிமையாக அதிக உயரத்திற்குத் தாவ உதவுகிறது. பூனைகள் பெரிய சுவரைக்கூட எளிமையாகத் தாண்டுவதை நீங்களும் பார்த்திருக்கலாம்.

- **பூனைகளுக்கு மொத்தம் 18 விரல்கள் உள்ளன**

பூனைகளின் ஒவ்வொரு முன்னங்காலிலும் ஐந்து விரல்களும் ஒவ்வொரு பின்னங்காலிலும் நான்கு விரல்களும் இருக்கின்றன.

- **பூனைகள் தங்களின் 70% ஆயுட்காலத்தை (ஒருநாளில் 13 முதல் 16 மணிநேரங்கள்) தூங்கியே கழிக்கும்**

பூனைகள் தூங்குவதால் தங்களின் ஆற்றலைச் சேகரித்து வைக்கின்றன. காட்டில் / தெருவில் வாழும் பூனைகள் உணவை வேட்டையாடுவதற்காகச் சேகரித்த ஆற்றலைப் பயன்படுத்துகின்றன. வீட்டுப் பூனைகளுக்கு உணவு எளிமையாகக் கிடைப்பதால் தூங்கித் தூங்கி உடல் பெருத்துவிடுகின்றன.

- **பூனைகளின் வாழ்வின் ஓராண்டு என்பது மனிதர்களின் 15 ஆண்டுகளுக்குச் சமம்**

வேகமாக முதுமையடையும் தன்மையுடைய பூனைகள் மனிதர்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த காலமே உயிர் வாழ்கின்றன.

- **பூனைகளின் மரபியல் அமைப்புகள் ஏறத்தாழ 95.6% புலிகளை ஒத்திருக்கும்**


இந்த வியப்பூட்டும் உண்மையை அண்மைக்கால ஆய்வு தெரிவிக்கிறது. பூனைகளின்

தன்மைகளான அதன் வாசனை, சிறுநீரால் அடையாளம் குறித்தல், இரையை வேட்டையாடுதல், தாவுதல் போன்றவை புலிகளை ஒத்திருப்பதாக அந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

**பூனை குறித்த ஒரு வரலாற்றுத் தகவல்**

*நபித்தோழர் அபூஹுரைரா(ரலி) அதிகமான நபிமொழிகளை அறிவித்த பிரபலமான நபித்தோழர். அவருடைய இயற்பெயரால் அவர் அறியப்பட்டதை விடவும் அபூஹுரைரா எனும் பட்டப் பெயராலேயே அறியப்பட்டுள்ளார். அபூஹுரைரா என்றால் பூனைக் குட்டி யின் தந்தை என்று பொருள். எப்போதும் பூனைக் குட்டிகளுடன், அவர் இருப்பதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் அத்தோழரை 'வாருங்கள் பூனைக் குட்டியின் தந்தையே..!' எனச் செல்லமாக அழைக்க அதுவே அவரது பெயராகி விட்டது.*

## செல்லங்களே..! பூனைக்கு நூல் கண்டினை எடுக்க வழிகாட்டுங்களேன்!



# அசத்தும் ஆளுமை

உலக சுகாதார நிறுவனம் (WHO) வரலாற்றில் முதல் முறையாக ஒரு முஸ்லிம் தலைமைப் பொறுப்புக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். டாக்டர் ஹனான் முஹம்மது அல் கவாரி எனும் முஸ்லிம் பெண்மணி சர்வதேச நாடுகள் முழு வதும் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் அமைப்பின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது பெருமைக்குரிய விஷயம்.

கத்தார் நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹனான் முஹம்மது அல் கவாரி, ஹெல்த் கேர் மேனேஜ்மென்டில் முனைவர் பட்டம் பெற்று 2007 முதல் கத்தார் ஹமத் மெடிக்கல் கார்ப்ப ரேஷன் நிர்வாக இயக்குநராகவும், 2016 முதல் கத்தார் பொது சுகாதாரத்துறை அமைச்சராகவும் செயல்பட்டு வருகிறார். கத்தார் நாட்டின் மருத் துவத் துறையின் அபரிமிதமான வளர்ச்சிக்கு இவரது பங்களிப்பு முக்கியமானது.

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் டாக்டர் ஹனான் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக அரபு மருத்துவக் கூட்டமைப்பின் ‘சிறந்த சுகாதாரத்துறை பெண் ஆளுமை விருது’ வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

கத்தாரில் அண்மையில் நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் போது இவரது தலைமையிலான குழுவினர் சிறப் பான மருத்துவப் பங்களிப்பை வழங்கினர். இதைப் பாராட்டிய உலக சுகாதார நிறுவனத்தின் 153ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் கத்தார் நாட்டிற்குத் தலைமைப் பொறுப்பை வழங்க ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கூடவே, WHO அமைப்பின் நியமனம், திட்டமிடல், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கண்காணிக்கும் சுப்ரீம் கவுன்சிலான உலக சுகாதார சபை (WHA) துணைத்தலைவராகவும் டாக்டர் ஹனான் முஹம்மது அல் கவாரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**- குளச்சல் ஆசிம்**



டாக்டர் ஹனான் முஹம்மது அல் கவாரி

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

REGN NO : TN / CCN / 428 / 2021-2023 RNI NO : 33723/81
LICENCED TO POST WITHOUT PREPAYMENT NO. TN/PMG(CCR)/WPP-450/21-23
Publication 1st & 16th of Every Month
SAMARASAM 16 - 31 JULY 2023
POSTED AT EGMORE RMS / 1 PATRIKA CHANNEL
Posted Between 16 - 18 JULY 2023

TRADITIONAL TRUST
LKS
SINCE 1925

"மனஇச்சைகளால் நரகம் சூழப்பட்டுள்ளது
சிரமங்களால் சொர்க்கம் சூழப்பட்டுள்ளது."

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்

35. கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611

பாரம்பரிய நம்பிக்கை... 1925 முதல்!


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**